Registered as a Newspaper

பக்கங்கள் 16+6+II

விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 38
கதிர் : 155

ஞாயிற்றுக்கிழமை 30 ஏப்ரல் 2023

சித்திரை 17 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# கந்தரோடையில் தனியார் காணியில் விகாரை அமைப்பதற்கு விண்ணப்பம்

## தென்னிலங்கை பிக்கு முயற்சி

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 30**

**சுன்னாகம், கந்தரோடையில் தமிழ் - பௌத்த எச்சங்கள் காணப்படும் இடத்துக்கு அருகில் தனியார் ஒருவரின் காணியில் விகாரை அமைப்பதற்கான விண்ணப்பத்தை தென்னிலங்கையைச் சேர்ந்த பிக்கு ஒருவர் தொல்லியல் திணைக்களத்துக்கு சமர்ப்பித்துள்ளார். இதற்கான அனுமதிகளை வழங்குவதற்கு தொல்லியல் திணைக்களமும் இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. விரைவில் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.** »14

## தமிழ் மக்களின் கோரிக்கை நீதிமன்றம் ஊடாகத் தீர்ப்பு

பொதுமுடக்கம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 30
பொதுமுடக்கத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் ஒன்று நீதிமன்றத்தின் ஊடாக நிறைவேற்றப்பட்டுள்ளது. எஞ்சிய கோரிக்கைகள் தொடர்பில் »15

சுற்றுலா சென்று திரும்பும்போது

## விபத்தில் சிக்கிய இளைஞன் சாவு!



யாழ்ப்பாணம், ஏப். 30
நண்பர்களுடன் மோட்டார் சைக்கிளில் சுற்றுலா சென்று திரும்பும்போது ஹைஏஸ் வாகனம் மோதியதில் காயமடைந்த இளைஞன் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந் »14

## மாகாணத் தேர்தலை விரைவாக நடத்துக!

கடும்தொனியில் அரசுக்கு இந்தியா அழுத்தம்

கூட்டணித் தலைவர்களிடம் கூறினார் தூதுவர்

யாழ்ப்பாணம், ஏப். 30
மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்தி அவற்றைச் செயற்படுத்தவேண்டும். 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். இதை இலங்கை அரசுக்கு »15

காங்கேசன் – காரைக்கால்

## சரக்குக் கப்பல்சேவையும் விரைவில் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், ஏப். 30
காரைக்காலுக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான சரக்குக் கப்பல் சேவையையும் ஆரம்பிப்பதற்கான திகதி மிக விரைவில் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. »15

## பேருந்தை முந்திச்செல்ல முயன்றபோது விபரீதம்

ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 30
கோப்பாய், பூதர்மடம் சந்தியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தை முந்திச்செல்ல முயன்றபோது எதிர்திசையில் பயணித்த கார் மோதியதில் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். மற்றுமொருவர் காயங்களுடன் »14

## மின்சாரம் தாக்கி இளைஞன் சாவு!



வவுனியா, ஏப். 30
ஆலய வழிபாட்டின்போது மின்சாரம் தாக்கியதில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார். »15

## கப் வாகனம் மோதி பெண் உயிரிழப்பு

நகைகள் அபகரிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 30
துவிச்சக்கரவண்டியில் சென்றுகொண்டிருந்த பெண்ணை பின்னால் வந்த கப் ரக வாகனம் மோதியதில் அவர் உயிரிழந்துள்ளார். »15

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.
ரூ. 112,000/=
• அதிகபட்ச இரகசியதன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
011 200 88 88
சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
Fitch Rating: "A –" (lka)' கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி
செலான் வங்கி

யாழ். மாவட்டத்தில்

## தவறான முடிவுகளை எடுத்து உயிர்மாய்ப்போர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 30
யாழ். மாவட்டத்தில் தவறான முடிவு எடுத்து உயிர்மாய்ப்போர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த மாதத்தின் ஆரம்பம் வரையில் »14

சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் ஊடகங்களுக்கு அச்சுறுத்தல்!

## கிளிநொச்சியில் நேற்று எதிர்ப்புப் போராட்டம்

**கிளிநொச்சி, ஏப்.30**

**உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுச் சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த எதிர்ப்புப் போராட்டம் கிளிநொச்சி ஊடக அமையத்தால் முன்னெடுக்கப்பட்டது.**



ஊடகங்களை அடக்கவே புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம், நாடாளுமன்ற உறுப்பினர்களே ஜனநாயகத்துக்கு எதிரான சட்டத்தை ஆதரிக்காதீர்கள், ஜனநாயகத்தைப் பாதுகாக்கவே சட்டங்கள் உருவாக்கப்படவேண்டும் ஒடுக்குவதற்கு அல்ல, புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் கருத்துச் சுதந்திரத்துக்குச் சாவு மணி, மக்களாட்சியின் மாண்புக்கு மதிப்பளி ஜனநாயகத்தை பலப்படுத்து போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் வடக்கில் உள்ள ஊடக அமைப்புக்கள், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சிவில் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், தென்னிலங்கை ஊடக தொழிற்சங்கம் என்பன கலந்துகொண்டன.

அரசாங்கத்தால் தற்போது முன்மொழியப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டவரைவு சட்டமாக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டால் அது ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறிவிடும் என்று கிளிநொச்சி ஊடக அமையத்தினர் தெரிவித்துள்ளனர்.

மக்களின் உரிமைகள் சார்ந்து, அவர்களின் ஜனநாயகம் சார்ந்த போராட்டங்கள், அரசின் ஜன நாயக விரோதச் செயற்பாடுகள் போன்றவற்றைச் சுட்டிக்காட்டி செய்திகள் பிரசுரித்தால் அது பயங்கரவாதத்தை ஊக்குவித்தல் அல்லது தூண்டுதல் என வியாக்கியானம் செய்யப்பட்டு அந்த ஊடகவியலாளர் கைது செய்யப்பட்டு மூன்று மாதங்கள் தடுத்து வைக்க முடியும். மூன்று மாதங்களுக்கு தடுத்து வைக்கும் அதிகாரம் இந்த புதிய சட்டத்தின் மூலம் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது ஊடக சுதந்திரத்துக்கும்,ஊடகவியலாளர்களின் சுயாதீனமான செயற்பாடுகளுக்கும் பெரும் அச்சுறுத்தல். ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகத்துறையின் ஜனநாயகக் குரல் இந்தச் சட்டத்தால் நசுக்கப்படும். அது மாத்திரமன்றி சமூக ஊடகங்களின் கருத்துச்சுதந்திரம் கூட இதனால் அடக்கப்படுகிறது. அத்துடன் பொதுமக்களின் கருத்துச் சுதந்திரம் பாதிக்கப்படும். தமிழ்,சிங்கள இளைஞர்கள் பழிவாங்கப்படுவார்கள். எனவேதான் இந்தச் சட்டவரைவுக்கு நாம் எமது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டு இந்தச்சட்டம் நிறைவேற்றப்படக்கூடாது என்பதை வலியுறுத்துகின்றோம் என்று அவர்கள் தெரிவித்தனர். (எ-14,113,214)

# மாணவரை ஏற்றாது செல்லும் பேருந்துகள்

## இ.போ.ச. முகாமையாளருக்கு ம. உ. ஆணைக்குழு அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.30

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பனிக்கன் குளம் மற்றும் கிழவன் குளம் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களை ஏற்றாது செல்லும் இ.போ.ச. பேருந்துகள் தொடர்பாக அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டும், அவை பின்பற்றப்படாமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்தியம் மீளவும் கவனம் செலுத்தியுள்ளது.

இதுதொடர்பில் எதிர்வரும் 2 ஆம் திகதி, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்துக்கு சமுகமளித்து விளக்கமளிக்க வேண்டும் என்று இ.போ.ச. வடபிராந்திய முகாமையாளருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட மாங்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் பனிக்கன்குளம் மற்றும் கிழவன்குளம் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களை ஏ-9 வீதியில் பயணிக்கும் பேருந்துகள் ஏற்றாது செல்கின்றன. அதனால் மாணவர்கள் வீடுகளுக்குச் செல்ல முடியாது பலமணிநேரம் வீதிகளில் அந்தரிக்கும் நிலைமை தொடர்ந்து நீடிக்கின்றது.

ஊடகங்களில் வெளிவந்த செய்திகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயம் சொந்த பிரேரணையின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டு இ.போ.ச. சாரதிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியது.

வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை புறக்கணித்து விட்டு மாணவர்களை இ.போ.ச. பேருந்துகள் தொடர்ந்தும் ஏற்றாது செல்கின்றன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் அறிவுறுத்தல்களை பின்பற்றாமை தொடர்பில் கலந்தாலோசிக்க இ.போ.ச. வடபிராந்திய முகாமையாளர் ஆணைக்குழுவில் முன்னிலையாக வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ச)

# கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய மாணவர்கள் இணைப்பு

கொழும்பு, ஏப்.30

மே மாத இறுதிக்குள் கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படும் என்று கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக புதிய மாணவர்களுக்கு கடந்த ஜனவரி மாதத்தில் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் 'இசட்' புள்ளிகளுக்கு அமைய விடய தானங்களுக்கு ஏற்ப திறமை அடிப்படையில்



விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு அவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டுள்ளது. ஆயினும் சிலர் மேன்முறையீடு செய்துள்ளனர். அதனால் தான் சற்றுத் தாமதம் ஏற்படுகிறது. இந்த நிலையில் எதிர்வரும் மே மாத இறுதிக்குள் கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படும்.

அது மட்டுமன்றி மாணவர்களுக்காக கல்வியமைச்சு வழங்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு மற்றும் தொழில்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் மீளச் செலுத்தும் அடிப்படையில் வங்கிகள் மூலம் வழங்கப்படும் 15 ஆயிரம் ரூபா கடனைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார். (எ-14,இ)

# கலைஞர் சந்திரசேகரன் காலமானார்

கொழும்பு, ஏப்.30

இலங்கையின் மூத்த வானொலி, தொலைக்காட்சி, மேடை நாடகக் கலைஞர் கலாபூஷணம் கே.சந்திரசேகரன் தமிழகம், மதுரையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலமானார்.

அவர் நீண்ட காலமாக இலங்கை தமிழ் நாடகத்துறைக்கு அளப்பரிய பங்களிப்புச் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-இ)

# உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.?

கொழும்பு, ஏப்.30

அமைச்சரவை மாற்றத்தின்போது எஸ்.பி.திசநாயக்க உயர் கல்வியமைச்சராக நியமிக்கப்படுவார் என அரசியல் வட்டாரங்களில் தகவல் வெளியாகியுள்ளது.

எஸ்.பி.திசநாயக்க முன்னரும் கல்விஅமைச்சராக பதவி வகித்துள்ளதால் அவர் இந்தப் பதவிக்கு பொருத்தமானவர் என்ற கருத்து நிலவுகின்றது என்றும் கூறப்படுகின்றது. அதேவேளை, எதிர்வரும் மே மாதத்தில் அமைச்சரவை மாற்றம் இடம்பெறலாம் என ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ-இ)

# ரணிலின் வீடு எரிப்பில் ரங்காவுக்கு தொடர்பாம்

## நீதிமன்றில் முற்படுத்தக் கட்டளை

கொழும்பு, ஏப்.30

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் சொந்த வீடு எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஜெ. ஸ்ரீரங்காவை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சந்தேகநபராக பெயர் குறிப்பிட்டுள்ளனர்.

அதையடுத்து ஸ்ரீரங்காவை எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவேண்டும் என்று சிறைச்சாலை அதிகாரிகளுக்கு கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே உத்தரவு பிறப்பித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு வவுனியாவில் இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவம் தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஸ்ரீரங்கா தற்போது விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ள நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தான்தோன்றித்தனத்தை ஜனாதிபதி விடவேண்டும்

*அத்துர்லிய தேரர் அறிவுரை*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான்தோன்றித்தனமாகக் கொண்டுவரும் பயங்கரவாத தடைச் சட்டவரைவுக்கு மக்களின் இணக்கம் கிடையாது. இது மக்களோடு மோதும் விடயம். இந்த நடவடிக்கையை ஜனாதிபதி கைவிடவேண்டும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டைப் பிரிப்பது போன்ற பயங்கரவாதம் இப்போது இங்கில்லை. தற்போதிருப்பது சிவில் பிரச்சினையே. அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பயங்கரவாத எதிப்புச் சட்டம் தேவையில்லை. இது மக்கள் மத்தியில் மோதலைத் தூண்டும் விடயம்.

சிக்கலான காலப்பகுதியில் நாட்டை பாரமேற்று தலைமைதாங்கிய ரணில் அந்தக் கௌரவத்தை தக்கவைத்துக் கொள்ளவேண்டும். தான்தோன்றித்தனமாகச் செய்யும் இவற்றையெல்லாம் கைவிடவேண்டும் - என்றார். (ச-22)


## வேலைவாய்ப்பு

ஏராளமான அனுகூலங்களுடன் வாழ்க்கையை வெற்றி கொள்ள எம்முடன் இணையுங்கள்

* வரையறையற்ற வருமானம்.
* வெளிநாட்டு சுற்றுலா பயணங்கள்.
* ஆடம்பர வாழ்க்கை.
* பதவி உயர்வுகள்.

**நேர்முகத்தேர்வுகளுக்கு முன்பதிவு செய்துகொள்ளுங்கள்.**

தொடர்புகளுக்கு:

**076 8820 551, 077 560 2579**

(CS 24674) A-1

## காணி விற்பனைக்கு

யாழ். மானிப்பாய் பிரிவில் ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகாமையில் வீட்டுடன் காணியும் அதற்குப் பின்னுள்ள 05 காணித் துண்டுகளும் விற்பனைக்குண்டு.

**077 308 8993, +164 766 87256**

(cs 50247) N-1


## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும்

**திருமதி பிரதீபன் துசிதபிரியா**

அவர்களின் அன்புத் தந்தை

**சரவணமுத்து மகேந்திரன்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(cs.24659) (n-1)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:05.01.1950 - உதிர்வு:24.04.2018

**அமரர் தம்பிமுத்து சிவபாதம்**

திதி – தசமி

ஐந்தாண்டுகள் கடந்து விட்டதா நம்பவே முடியவில்லை அப்பா!
ஆண்டுகள் நீளலாம் ஆனால் உங்கள் நீங்காத நினைவுகள்
கலைந்து செல்லும் மேகமென காலங்கள் கடந்து போகின்றனவே
ஆனாலும் உம் நினைவுகள் புயலென எரிமலையென
க்டலலையென எம் மனங்களில்
பொங்கிப்பிரவாகித்துக் கொண்டே இருக்கும்.
வீசும் காற்றினிலும் நாம் விடும் மூச்சினிலும்
எட்டுதிக்குகளிலும் உம் நினைவால் வாடுகிறோம் அப்பா!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் - எம்மை
பாசத்தின் சுமையோடு அரவணைத்துக் காத்த
எமது அன்புத் தெய்வமே அப்பா
உங்கள் நினைவலைகள் என்றும் எம்
நெஞ்சினில் நீங்காமல் நிலைத்திருக்கும்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**குமாரசாமி தம்பிப்பிள்ளை**

தோற்றம்: 15.09.1927 மறைவு: 29.04.2023



கரம்பைக்குறிச்சி மேற்கு குருக்கள் குடியிருப்பு வரணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி தம்பிப்பிள்ளை நேற்று (29.04.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற வேலாயுதர் சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான ஐயாப்பிள்ளை, வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோதரனும், புவனேஸ்வரி, ஞானேஸ்வரி (அமரர்), நாகேஸ்வரி (அமரர்), வைரவநாதன் (அமரர்), செல்வந்தி நாதன் (பிரான்ஸ்), சிவசெந்திநாதன் (பிரதம கணக்காளர் - திறைசேரி, கிழக்கு மாகாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுப்பிரமணியம், திருச்செல்வம் (அமரர்), இலட்சுமணன் (அமரர்), முகுந்தினி (பிரான்ஸ்), சறோஜாதேவி (அமரர்), வைதேகி (அமரர்), கைலாசநாதக்குருக்கள், கலைநிலா (அமரர்), செவ்வேல் ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2023) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பி.ப. 3 மணிக்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் தறளப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கரம்பைக்குறிச்சி மேற்கு,**
**குருக்கள் குடியிருப்பு, வரணி,** **T.P:077 0858 139**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 10 . 1930



இறப்பு 29 . 04 . 2023

**கந்தன் சின்னம்மா**

மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் சின்னம்மா நேற்று (29.04.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சி.கந்தன் அவர்களின் அன்பு மனைவியும், அமரர் சோமு, வசந்தாதேவி, மல்லிகாதேவி, மகாலிங்கம், புஷ்பராணி, அமரர் தங்கராசா, தங்கராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, காசிப்பிள்ளை, இரகுநாதன், கமலாதேவி, செல்வராசா, அமரர் சிங்கராசா ஆகியோரின் அன்பு மாமியும், கிருஷ்ணப்பிள்ளை, ரவிச்சந்திரன், சசிகுமார், ரூபகுமார், அமரர் விஜயகுமார், தர்சினி, லோகேஸ்குமார், நிர்மலா, உதயகலா, சசிகலா, நிசாந்தன், மகிந்தன், நிரூபன், இரஜிதா, இரஜிதன், இறஞ்சிதா, இறஞ்சிதன், சஞ்சீவன், சஞ்சிதன், சரூபன், சயந்தன், சசீபன், விதுசன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2023) ஞாயிற்றுக்கி[illegible] அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக காந்தாளம்பி[illegible] எடுத்துச் செல்லப்படும்.

**077 0344 282, 076 656 4733** **தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 05 . 1951



மறைவு 29 . 04 . 2023

**திருமதி சதாலட்சுமி இராசயோகன் (பூமா)**

உண்ணாப்புலவு முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் 65, சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சதாலட்சுமி இராசயோகன் நேற்று (29.04.2023) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் இராசவல்லவன் இராசயோகன் (ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர் - மானிப்பாய்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் பாக்கியலக்ஷ்மி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராசவல்லவன் யோகமலர் தம்பதியரின் அன்பு மருமகளும், க.சத்தியதேவி, ச.நகுலேஸ்வரன், ச.சச்சிதானந்தன், ச.பரமானந்தன், அ.சதாரூபவதி, ச.சத்தியசீலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கனகரட்ணம் மற்றும் ந.மின்னாம்பிகை, ச.ரஞ்சிதரமணி, ப.புவனேஸ்வரி, அருளேஸ்வரன், ச.விஜிதா ஆகியோரின் அன்பு மைத்துனியும், இராஜசேகரன் (இலங்கை வங்கி, கல்வியங்காடு), இசைவாணி (மக்கள் வங்கி, அச்சுவேலி), கலைவாணி (மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி), மோகனவாணி (கிராம உத்தியோகத்தர் J/138- மானிப்பாய்), யமுனாவாணி (மக்கள் வங்கி, ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்புத் தாயாரும், வைதேகி (இலங்கை வங்கி, கோப்பாய்), ஹரிபவன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், மோட்டார் போக்குவரத்து திணைக்களம், யாழ். பிரதேச செயலகம்), உமாசுதன் (பொதுச் சுகாதாரப் பரிசோதகர், சங்கானை), கோபிராஜ் (கணிய அளவையாளர்), வினு (பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஹர்ஷிதா, வித்தகன், அவதாரன், அக்ஷ்யா, நயனிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2023) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 3.00 மணி யளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**65, சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.**
**077 106 4762**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 24684) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலைபேசியில் மூழ்கடிக்காது ஆரோக்கியத்தை மேம்படுத்துக

## வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு



**யாழ்ப்பாணம், ஏப்.30**

**குழந்தைகள் கையடக்கத் தொலைபேசி பாவனைக்குள் மூழ்காத வண்ணம் ஆரோக்கியமான அனுகுமுறையை - புரிதலை பெற்றோர் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.**

இவ்வாறு வலிகாம வலய முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கிருபானந்தன் தெரிவித்தார்.

இணுவில் பொது நூலக சிறுவர் திறன் விருத்தி மையத்தில் இடம் பெற்ற சிறுவர் கண்காட்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- கையடக்கத் தொலைபேசி பாவனையானது குழந்தைகள் மூளை விருத்தியை குறைவடையச் செய்வதுடன் சரியான முடிவுகளை எடுக்கும் திறனையும் பாதிக்கின்றது என மருத்துவர்களால் எச்சரிக்கப்படுகிறது.

இன்றைய சூழலில் அநேகமான பெற்றோர் சிறுவர்களிடம் அலைபேசியை கையளித்துவிட்டு தமது பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றனர்.

ஒரு குழந்தையின் மூளை 4 தொடக்கம் 7 வயது வரை விருத்தியடைகிறது. இந்தக் காலப்பகுதியில் மூளைக்கு கடத்தப்படுகின்ற பல விடயங்களிலேயே சிறுவர்களின் எதிர்காலம் தங்கியுள்ளது.

இத்தகைய வேளைகளில் அவர்களுக்கு ஆரோக்கியமான அணுகுமுறையை - புரிதலை ஏற்படுத்த வேண்டும்.

பெற்றோர் தமது பிள்ளைகளிடம் அலைபேசியை வழங்காது ஏனைய பொழுதுபோக்கு அம்சங்களில் கவனத்தை செலுத்தச் செய்ய வழிவகுக்க வேண்டும்.

மூதாதையர் காலத்தில் கற்றுக் கொடுக்கப்பட்ட பாரம்பரிய விளையாட்டுக்களில் குழந்தைகளை ஈடுபடுத்தவேண்டும். குழந்தைகளுடன் பெற்றோர் அதிக நேரத்தை செலவிடவேண்டும். மாறிவரும் உலக மாற்றம் சவால்களை தந்தாலும் பெற்றோர் குழந்தைகளுக்காக தியாகங்களை ஏற்கவேண்டும்- என்றார். (ச)

## நலன்புரி நிவாரண உதவி

# ஒரு மணி நேரத்துக்குள் 100 பேர் வரையில் பதிவு

சாவகச்சேரி, ஏப். 30

நலன்புரி நிவாரண உதவிப் படிவங்களை சமர்ப்பிக்க காலஅவகாசம் வழங்கப்பட்டதையடுத்து ஒருமணிநேரத்தில் நூறுக்கும் மேற்பட்ட படிவங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என தென்மராட்சிப் பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

நலன்புரி நிவாரண உதவிகளைபெற்றுக் கொள்ள இதுவரை 13 ஆயிரத்து 401 விண்ணப்பங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

நலன்புரி நிவாரண உதவி பெற தகைமையுள்ளவர்களை விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டதையடுத்து பிரதேச செயலக அலுவலர்களால் விவரங்கள் பெறப்பட்டு கடந்த மாதம் 31 ஆம் திகதி கையளிக்கப் பட்டது.

இதன்போது விண்ணப்பிக்காத பலர் தம்மை திட்டத்தில் இணைக்குமாறு கோரியிருந்தனர் .

அதற்கமைய விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி வரை காலஅவகாசம் வழங்கப்பட்டது. தகைமையுள்ளவர்களின் விவரங்களைப் பெற்று கிராம அலுவலர்கள் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது.

அறிவுறுத்தலுக்கமைய நேற்று ஒரு மணி நேரத்தில் நூறுக்கும் மேற்பட்ட நலன்புரி நிவாரண உதவிப் படிவங்கள் பிரதேச செயலகத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. (ச-9)

# மே தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப்.30

வடமாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் மே தினத்தன்று மோட்டார் வாகன ஊர்வலமொன்று நடைபெறவுள்ளது.

மே முதலாம் திகதி காலை 8.30மணியளவில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலிருந்து மோட்டார் வாகன ஊர்வலம் ஆரம்பித்து யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் நிறைவு பெறவுள்ளது.

அன்று அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடி ஊர்வலத்துக்கு ஒத்துழைக்கவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.. (எ-20)

கிளிநொச்சி, ஏப்.30

சமத்துவக் கட்சியின் ஏற்பாட்டில் மே தின நிகழ்வுகள் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி அனைத்து ஒடுக்குமுறைகளையும் எதிர்ப்போம், மக்களின் உரிமைகளை மீட்டெடுப்போம் எனும் தொனிப்பொருளில் பிற்பகல் 2 மணிக்கு மே தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

மே தின நிகழ்வில் பொது மக்கள், தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் என அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# ஹசீஸ் போதைப்பொருள்: மன்னாரில் ஒருவர் கைது!



மன்னார் சிலாவத்துறையில் 8 லட்சம் பெறுமதியான ஹசீஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார் என்று மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மன்னார் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது 893 கிராம் ஹசீஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதி என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர் சிலாவத்துறைப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவர் எனத் தெரிவித்த பொலிஸார், அவரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-14,213)

# பொலிஸ், நீதிமன்ற நடவடிக்கை விவரங்களைப் பெற நவீன திட்டம்

கொழும்பு, ஏப்.30

பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்தல் முதல் நீதிமன்ற நடவடிக்கைகள் வரை விவரங்களை நவீன தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ளக்கூடிய புதிய முன்னோடித் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது எனப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் செயலாற்றுகை அறிக்கை ஆகியவற்றை ஆராய்வதற்காக கோபா குழுவில் பொலிஸ் திணைக்களம் முன்னிலையாகியபோது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நவீன தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வினைத்திறனான சேவையை வழங்க பொலிஸ் துறையை கட்டமைக்கும் வேலைத்திட்டம் குறித்து குழுவில் ஆலோசிக்கப்பட்டது.

இலங்கை பொலிஸாருக்கு ஒரே தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பை அமைப்பது கடினம். பகுதிகளாக தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்புக்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் மா அதிபர் சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய நவீன தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வினைத்திறனான சேவையை வழங்க பொலிஸ் துறையை கட்டமைக்கும் உத்தேச வேலைத் திட்டத்தை ஒருமாத காலத்துக்குள் சமர்ப்பிக்குமாறு கோபா குழு பொலிஸ் திணைக்களத்துக்கு பணித்துள்ளது. (ச-இ)

# பொலிஸ்மா பதவிகள்: பெண்கள் உள்ளீர்ப்பு!

கொழும்பு, ஏப். 30

பொலிஸாரின் பழைய நிலைமை மாற்றப்பட்டு எதிர்காலத்தில் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட உயர்பதவிகளுக்குப் பெண்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் மாற்றங்களை மேற்கொள்வதற்கானதிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

நவீன தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வினைத்திறனான சேவையை வழங்க பொலிஸ் துறையை கட்டமைக்கும் வேலைத்திட்டம் குறித்து கோபா குழுவில் ஆராயப்பட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை பொலிஸில் பணியாற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்தும் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

2 ஆயிரத்து 419 பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் பணியிடங்களுக்கு வெற்றிடம் உள்ளது. இந்தாண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு உத்தேசிக்கப்பட்டபோதும் அதனை நிறைவேற்ற முடியாமல் போயுள்ளது.

எதிர்காலத்தில் பெண் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட உயர் பதவிகளுக்கு பெண்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என பொலிஸ்மா அதிபர் சுட்டிக் காட்டினார். (ச-இ)

# சித்திரைத் திருவிழா



கைதடி மத்தி குமரநகர் சனசமூக நிலையத்தின் சித்திரைத் திருவிழா அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் பாரம்பரிய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன் போட்டிகளில் கலந்து கொண்டவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

சனசமூக நிலையத் தலைவர் அ.செந்தூரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-14,159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடித் தீர்வு அரசால் புனையப்பட்ட கதையே

## நாடாளுமன்றில் அநுர சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஏப்.30**

**சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் மக்கள் போராட்டத்தை நிச்சயம் தீவிரப்படுத்தும். இறக்குமதி செலவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் டொலர் கையிருப்பு சேமிக்கப்பட்டுள்ளதே தவிர பொருளாதாரம் முன்னேற்றமடையவில்லை. இந்த நிலையில் ஜனாதிபதி ரணிலின் கற்பனையில் பொருளாதார மீட்சி வெற்றிபெறுமா? அல்லது சமூகக் கட்டமைப்பின் நடைமுறைத் தன்மை வெற்றி பெறுமா?.**

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது அரசாங்கத்தின் தீர்மானங்களால் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு எட்டப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி குறிப்பிடுவது அடிப்படையற்றது. டொலர் நெருக்கடிக்குத் தீர்வுகாண வேண்டுமாயின் ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கப்படவேண்டும். கடந்த 2022ஆம் ஆண்டு முதலிரு மாதங்களில் ஏற்றுமதி வருமானம் 2 ஆயிரத்து 196 மில்லியன் டொலராகக் காணப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு நிறைவடைந்த மூன்று மாத காலப் பகுதிகளில் ஏற்றுமதி வருமானம் ஆயிரத்து 960 மில்லியன் டொலராகக் காணப்பட்டது. குறுகிய காலத்துக்குள் ஏற்றுமதி வருமானம் 11 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. இறக்குமதிச் செலவு 37 சதவீதத்தால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் டொலர் கையிருப்பு சேமிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரம் ஒடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் எவ்வாறு பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாணமுடியும். நாட்டின் அபிவிருத்தித் துறையை முடக்கி எவ்வளவு காலம் இருக்கமுடியும். மறுபுறம் வெளிநாட்டுக் கடன் செலுத்தப்படவில்லை. இதன் மிகுதியே டொலர் சேமிக்கப்பட்டுள்ளது. ஆகவே பொருளாதார நெருக்கடிக்கு குறுகிய காலத் தீர்வு கூட காணப்படவில்லை. கடுமையான நிபந்தனைகளை செயற்படுத்தினால் நடுத்தர மக்கள் வீதிக்கு இறங்கி போராட்டத்தில் ஈடுபடுவார்கள்.

மக்கள் போராட்டத்தை அடக்கவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கற்பனை பொருளாதார மீட்சி வெற்றி பெறுமா? அல்லது, சமூகக் கட்டமைப்பின் தற்போதைய நிலை வெற்றி பெறுமா? என்பதை பார்த்துக் கொண்டிருக்கிறோம். சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு ஒருபோதும் சிறந்த தீர்வைப் பெற்றுக்கொடுக்காது- என்றார். (எ-14,இ)

# வீட்டுத் திட்டத்துக்கு பயனாளிகள் தெரிவு

சாவகச்சேரி, ஏப்.30

மீள்குடியமர்வு அமைச்சின் நிரந்தர வீடு அமைக்கும் திட்டத்தின் கீழ், கிராமஅலுவலர் பிரிவுகளில் தலா ஒரு பயனாளிகள் தெரிவு இடம்பெற்று வருகின்றன.

60 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் பத்து லட்சம் ரூபா வீட்டுத் திட்டத்துக்கு 32 பயனாளிகளையும், ஆறு லட்சம் ரூபா வீட்டுத் திட்டத்துக்கு 20 பயனாளிகளையும் தெரிவு செய்து அனுப்பவேண்டும் என்று மாவட்டச் செயலகத்தால் அறிவிக்கப்பட்டதை அடுத்து பயனாளிகள் தெரிவு இடம்பெற்று வருகின்றன.

திட்டத்துக்கு வழங்கப்படும் தொகையில் வீடு முழுமையாக கட்டுவதாக பயனாளிகளிடம் சம்மதக் கடிதம் பெறப்படுகின்றது என்று பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயனாளிகள் தெரிவு இடம்பெற்ற பின்னர் பொதுமக்களின் பார்வைக்கு காட்சிப்படுத்தி ஆட்சேபனைகள் இல்லாதவிடத்து விவரங்கள் மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. (எ-14,9)

# மகளிர் விழா

யாழ்ப்பாணம், ஏப்.30

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் மற்றும் அரியாலை மத்திய நூல் நிலையம் ஆகியன இணைந்து உப அதிபர் புவனேஸ்வரி புஷ்பநாதன் ஞாபகார்த்தமாக நடத்தும் மகளிர் விழா, இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத்தின் மாதர் பிரிவுப் பொறுப்பாளர் ரமணஷாமினி பிரியந்தவீரசேகர தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பற்சிகிச்சை நிபுணர் திருமகள் குருநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (எ-14,66)

# இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 30

அகில இலங்கை காந்தி சேவா சங்க புனரமைப்பு தொடர்பான ஆலோசனைக் கூட்டம், இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். மின்சார நிலைய வீதியில் உள்ள பல்சமய கருத்தாடல் நிலையத்தில் நடைபெறவுள்ளது. எனவே கூட்டத்தில் சங்க உறுப்பினர்களைக் கலந்து கொண்டு புனரமைப்பு தொடர்பான ஆலோசனைகளை வழங்கவேண்டும் என்று சங்கச் செயலாளர் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (எ-14,9)

# மதத்தலைவர்களின் பிரச்சினை; அறிக்கை சமர்ப்பிக்கப் பணிப்பு!

யாழ்ப்பாணம், ஏப்.30

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினர், மதத் தலைவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையிலான கலந்துரையாடல்களை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று பிரதேச செயலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மதத் தலைவர்களை அழைத்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள மதத் தலைவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் மே மாதம் இரண்டாம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-14,9)

# மே தினத்தில் குருதிக்கொடை

**யாழ்ப்பாணம், ஏப். 30**

சர்வதேச உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு ஏழாலை இந்து இளைஞர் சபையினரின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம், நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை ஏழாலை மேற்கு உதயசூரியன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குருதிக்கொடை முகாமில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும், ஆர்வலர்களையும் தவறாது கலந்துகொண்டு உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (எ-14,66)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் இழுபறியாகும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வீண் செலவுகள் ஏற்படலாம். பண உதவி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**இடபம்:** மனதில் சிறு சிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதில் பொறுமை அவசியம். சகோதரர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்** உற்சாகமாகவும் பரபரப்பாகவும் செயல்படுவீர்கள். நினைத்த காரியத்தை நினைத்தபடி முடிப்பீர்கள். மனவருத்தங்கள் நீங்கும். செலவுகளை சமாளிப்பதில் சிரமம் இருக்காது.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். அவ்வப்போது மனதில் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**சிம்மம்:** அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். காரியங்களில் பொறுமை மிக அவசியம். அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்பு கரையும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**கன்னி:** செலவுகள் அதிகரிக்கும் நாள். என்றாலும் தேவையான பணம் [illegible] சமாளிப்பதில் சிரமம் இருக்காது. மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**துலாம்:** ஆதாயம் கிடைக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். நிம்மதி உண்டாகும்.

**விருச்சிகம்:** பதற்றம் இல்லாமல் செயற்படவேண்டிய நாள். வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பேசும்போது பொறுமையைக் கடைப் பிடிக்கவும்.

**தனுசு:** புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். அவ்வப்போது சோர்வு உண்டாகும். உறவினர்களின் வருகையால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** மனதில் அவ்வப்போது சில குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகள் மூலம் குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து வரும். சகோதரர்கள் மூலம் ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**மீனம்:** ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வரமா? சாபமா?

சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கை உள்ளடக்கங்கள் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் அந்த உடன்படிக்கையை நடைமுறைப் படுத்துவதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதி கிடைத்திருக் கின்றது. நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கு களால் இந்த அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக 3 நாள்களாக நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட்டிருக்கின்றது. சர்வதேச நாணய நிதி யத்தின் உடன்படிக்கையின் உள்ளடக்கங்கள் தொடர்பாக எதிர்க்கட்சிகளால் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் பட்டன. சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை நடை முறைப்படுத்தப்பட்டால் நாட்டின் சாதாரண மக்கள் பெரி தும் பாதிக்கப்படுவார்கள் என்ற விடயம் பெரிதும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிய பின்னர் வரி சையுக காலத்தில் சர்வதேச நாணய நிதியம் என்ற சொல் இலங்கையர்களிடையே பிரபலமானது. சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி கிட்டினால் இந்த நெருக்கடி நிலைமை மாற்றம் பெற்றுவிடும் என்ற மனவோட்டம் இலங்கையர் களிடம் ஏற்பட்டது – ஏற்படுத்தப்பட்டது. ஆனால், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நிதியுதவியைப் பெறுவதின் சாதக – பாதக நிலைமைகள் சாதாரண மக்களுக்குத் தெரிந்தி ருக்க வாய்ப்பில்லை அது கத்திமேல் நடப்பதற்கு ஒப்பானது என்று ஆரம்பத்திலேயே எச்சரித்திருந்தனர் பொருளாதார வல்லுநர்கள். அதற்கு உதாரணமாக சில நாடுகளின் கடந்த காலங்களையும் அவர்கள் தொட்டுக் காட்டியிருந்தனர்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி அதன்பின்னர் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி என்பவற்றால் அவசர அவசர மாக சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடைந்திருக்கின்றது இலங்கை அரசாங்கம். சர்வதேச நாணய நிதியத்துடன் உடன் படிக்கை எட்டப்பட்டு, அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்பட்டு அனுமதியும் பெறப்பட்டிருக்கின்றது. ஆனால், அந்த உடன்படிக்கையின் உள்ளடக்கங்கள் இன்னமும் புதி ராகவே இருக்கின்றன. அந்த உடன்படிக்கையில் என்ன உள்ளது ? சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின்படி எதிர்காலத்தில் இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவேண் டிய நடவடிக்கை என்ன ? என்பது பற்றி நாட்டின் சாதாரண மக்களுக்கு எதுவுமே தெரியாது. நாணய நிதியத்தின் உதவி கிட்டினால் இலங்கையின் பொருளாதார நெருக்கடி தீர்ந்துவிடும் என்பதையே திரும்பத் திரும்பக் கூறிக் கொண் டிருக்கும் ஜனாதிபதியும், அரசாங்கத் தரப்பினரும், அது எவ்வாறு சாத்தியமாகும் என்பது பற்றி இன்னமும் வாய் திறக்காமலேயே உள்ளனர்.


கடந்த காலங்களிலும் சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை நிதியுதவிகளைப் பெற்றிருந்தாலும், இப்போதைய நிலைமையோ வித்தியாசமானது. கையறு நிலையில் சரணா கதியடைந்துள்ள இலங்கை கடந்த காலங்களைப் போன்று ஏய்த்துக்கொண்டு செல்ல சர்வதேச நாணய நிதியம் இட மளிக்காது. இம்முறை எட்டப்பட்ட உடன்படிக்கை இலங்கை அரசாங்கம் கட்டாயம் நிறைவேற்றியாக வேண்டிய தேவை இருக்கின்றது. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள் வதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் இனிப்பாக இருக்காது என்பது திண்ணம். உள்நாட்டு வரு மானத்தை அதிகரிக்காது பொருளாதார மீட்சி சாத்தியமில்லை என்ற நிலையில், அதைச் சாத்தியமாக்குவதற்கான நாணய நிதியத்தின் நிபந்தனைகள் கடும்போக்காகவே இருக்கும்.

தற்காலத்தில் இலங்கையைப் போன்று வளரும் நாடுகள் பலவற்றில் பொருளாதார நெருக்கடிகள் தோன்றியுள்ள போதும், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்ற முதல்நாடாக மாறியிருக்கின்றது இலங்கை. அதைப் பெரு மையாகக்கூறியிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இது பெருமை கொள்ள வேண்டிய – மகிழ்ச்சி கொள்ள வேண் டிய விடயமா என்பது எதிர்வரும் காலங்களில் தெரியும்.

நாளொரு நல்வார்த்தை

"எனது வெற்றிகள் மூலம் என்னை மதிப்பிடாதீர்கள். எத்தனைமுறை நான் கீழே விழுந்து மீண்டும் எழுந்தேன் என்பதை வைத்து மதிப்பிடுங்கள்"

– நெல்சன் மண்டேலா




# கடன் சுமையிலிருந்து மீளும் ஒரேநாடு இலங்கை மட்டுமே

## ஜனாதிபதி ரணில் பெருமிதம்

**கொழும்பு, ஏப்.30**

**பல்வேறு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தற்போது கடன் சுமையில் உள்ளன. கடன் சுமையில் மீள நடவடிக்கை எடுத்த முதல் நாடு இலங்கை மட்டுமே என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**



கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

போருக்காக, ரஷ்யா ஒரு பக்கம் அதிக நிதியைச் செலவு செய்கின்றது. மேற்குலகம் மறுபுறம் அதிக பணத்தைச் செலவு செய் கின்றது. அமெரிக்கா மட்டும் யுக்ரைனுக்கு 100 பில்லியன் டொலரை வழங்கியுள்ளது. சம்பந்தப்பட்ட நாடுகள் அதிக அளவில் விமா னங்கள் மற்றும் போக்குவரத்துக் கப்பல்க ளைப் பயன்படுத்தி தங்கள் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு பெருமளவு பணத்தைச் செலவிடுகின்றன.

அடுத்த சில ஆண்டுகளில் மட்டும் 100 பில் லியன் டொலருக்கு மேல் இதற்காகச் செல விடப்படவுள்ளது. அமெரிக்கா, சீனா, இந் தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் இதற்காக அதிக பணத்தைச் செலவு செய்கின்றன.

பல்வேறு அபிவிருத்தி அடைந்து வரும் நாடு கள் தற்போது கடன் சுமையில் உள்ளன. கடன் சுமையில் மீள நடவடிக்கை எடுத்த முதல் நாடு இலங்கை மட்டுமே - என்றார். (எ-இ)

# உயர்கிறது ரூபாவின் பெறுமதி

கொழும்பு, ஏப். 30

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்வடந்துள்ளது என மத்திய வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

மத்திய வங்கி புள்ளிவிவரங்களுக்கமைய ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 12.9 சதவீதம் உயர்ந்துள்ளது. குறுக்கு நாணய மாற்று விகித நகர்வுகளின் அடிப்படையில், இந்தக் காலகட்டத்தில் ஜப் பானிய யென்னுக்கு நிக்ராக இலங்கை ரூபா 14.2 சதவீதம் உயர்ந்துள்ளது.

ஸ்ரேலிங் பவுண்டுக்கு நிகராக 8.8 சத வீதமும், யூரோவுக்கு நிகராக 9.1 சதவீதமும் இந்திய ரூபாவுக்கு நிகராக 11.4 சதவீதமும் இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித் துள்ளது. (ச-இ)

நாள்காட்டி

**01.05.2023**

**திங்கட்கிழமை**

**சித்திரை 18**

சுபநேரம் : 11.57 - 01.27

ராகுகாலம் : 07.27 - 08.57

**மே தினம், ஏகாதசி விரதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் சூடுபிடிக்கும் பின்கதவு பேரம் பேசல்கள்

கொழும்பு, ஏப். 30

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசில் இணைவதற்கு முடிவெடுத்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த மூன்று வாரங்களில் மாத்திரம் கொழும்பில் 5 தடவைகள் இரகசியச் சந்திப்புக்களை நடத்தியுள்ளனர் என்று அறியமுடிகின்றது.**

அரசுடன் இணைவது தொடர்பில் பல விடயங்கள் இந்தச் சந்திப்புக்களின்போது பேசப்பட்டுள்ளன.

இறுதியாக நடைபெற்ற சந்திப்பில் அனைவரும் ஒரே தடவையில் குழுவாகச் சென்று அரசுடன் இணைவதா அல்லது கட்டம் கட்டமாக இணைவதா என்பது தொடர்பில் முக்கியமாகப் பேசப்பட்டுள்ளது. சகலரும் ஒரே தடவையில் அரசுடன் இணைந்தால் ஐக்கிய மக்கள் சக்தியில் சஜித் பிரேமதாஸ மாத்திரமே மிஞ்சுவார் என்று இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட சிலர் தெரிவித்துள்ளனர். (ஒ-22)

## ஐ.எம்.எப். நிதிவசதி சு.க. ஆதரவளிக்கும்

### மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 30

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான ஏற்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானத்துக்கு தமது கட்சி ஆதரவளிக்கும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவிக்கையில்,

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான ஏற்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

நல்லாட்சியின்போது சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் இணைந்து செயற்பட்டோம். நாணய நிதியத்தால் நிபந்தனைகள் முன்வைக்கப்படலாம். அனைத்தையும் நாம் ஏற்க வேண்டும் என்றில்லை. பேச்சு நடத்தி திருத்தங்களை மேற்கொள்ளலாம்.

எனவே, சர்வதேச நாணய நிதியத்தின் நிதி நாட்டுக்கு அவசியம். அதற்குத் தேவையான ஆதரவை எமது கட்சி வழங்கும் - என்றார். (ச-இ)

## பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் எழுவர் உடனடி இடமாற்றம்

கொழும்பு, ஏப். 30

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் 7 பேர் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். சேவை நிமித்தம் காரணமாக இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி தென்மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் இருந்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பத்திநாயக்க மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் டி.கே.ஜெயலத், கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து வடமேற்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக மாற்றப்பட்டுள்ளார்.

மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய சிரேஷ்ட குற்றவியல் மற்றும் போக்குவரத்துப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் ஆர்.எல் கொடித்துவக்கு, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மருத்துவ சேவைகள் நலன் மற்றும் களப்படையில் இருந்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் உதவி சேவைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பிரதி உதவி சேவைகள் மற்றும் வடமேற்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.பி மெதவத்த, தென் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக மாற்றப்பட்டுள்ளார்.

குற்றவியல் மற்றும் போக்குவரத்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் டி.கே. சில்வா, சிரேஷ்ட பிரதி மருத்துவ சேவைகள், நலன்புரி மற்றும் களப்படைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ச-இ)

## சீன முதலீட்டில் விரைவில் மசகு சுத்திகரிப்பு நிலையம்

கொழும்பு, ஏப். 30

நாளாந்தம் 4 தொன் மசகு எண்ணெய் சுத்திகரிக்கக் கூடிய அதி நவீன தொழில்நுட்பத்துடனான சுத்திகரிப்பு மத்திய நிலையம் ஒன்று இலங்கையில் புதிதாக விரைவில் அமைக்கப்படும் என இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ் சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போதுள்ள மசகு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மிகப் பழமையானது.

இந்தநிலையில் புதிதாக அதி நவீன தொழில்நுட்பத்துடன் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கென இந்த வருடத்தில் 120 முதல் 140 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான முதலீடு சீனாவால் இலங்கையில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் புதிய சுத்திகரிப்பு நிலையம் திறக்கப்பட்டதன் பின் நாட்டின் எரிபொருள் விநியோகத்துறையில் பெரும் மாற்றங்கள் ஏற்படக் கூடும். பல புதிய தொழில்வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறக்கூடும் - என்றார். (ச-இ)

## அமெரிக்கத் தூதுவரின் திறமையால் மகிழ்ச்சி!

### விமல் 'கலாய்ப்பு'




கொழும்பு, ஏப். 30

அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் எனது புத்தகத்தை ஒரேநாளுக்குள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வாசித்து பகிர்ந்தமை கண்டு மகிழ்வடைகிறேன் என விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது புத்தகத்தை 'புனைவு' என்று கூறியதற்குப் பதிலளிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ இதனைக் குறிப்பிட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ எழுதிய 'ஒன்பது மறைக்கப்பட்ட கதை' நூல் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது.

கடந்த ஆண்டு காலிமுகத்திடலில் மறைக்கப்பட்ட கதையை இந்த நூல் வெளிப்படுத்துகிறது என விமல் கூறியிருந்தார். அதில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் பின்னணியில் அமெரிக்கா இருந்ததாக குற்றச்சாட்டு முன்வைத்திருந்தார்.

அதனை மறுத்த அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் 'புனைகதை' என்று முத்திரை குத்தப்படவேண்டிய புத்தகம் எனக் குறிப்பிட்டார். அந்தக் கருத்துக்கே, ஒரே நாளில் படிக்க அவர் ஆர்வமாக இருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்." என விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். (ச-இ)

## வாழ்வும் சாவும் மொட்டுவிலேயே

### கூறுகிறார் சரத் வீரசேகர



கொழும்பு, ஏப். 30

நாட்டைப் பிரிக்கும் நிலை ஏற்பட்டால் மாத்திரமே நான் மொட்டுக் கட்சியை விட்டுச் செல்வேன். அதுவரை இந்தக் கட்சியில்தான் இருப்பேன் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் எப்போதும் மொட்டுக் கட்சிதான். என்னை அம்பாறையில் இருந்து கொழும்பில் போட்டியிடுமாறு கோத்தாபயதான் அழைத்தார். 3 இலட்சத்து 28 ஆயிரம் வாக்குகளை கொழும்பு மக்கள் எனக்கு வழங்கி என்னை வெற்றி பெற வைத்தனர். எந்தக் கட்சியிலும் வீழ்ச்சி எழுச்சி என்ற இரண்டும் உண்டு. நான் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி பின்னடைவைச் சந்திக்கும்போது அதில் இருந்து விலகுவது சரியில்லை.

நாட்டின் பாதுகாப்புக்கு ஏதும் ஆபத்து ஏற்பட்டால் அல்லது நாட்டைப் பிரிக்கும் நிலை ஏற்பட்டால் மாத்திரமே நான் மொட்டுக் கட்சியை விட்டுச் செல்வேன். அதுவரை இந்தக் கட்சியில்தான் இருப்பேன். அதனால்தான் நான் இன்றும் மொட்டுக் கட்சியில் உள்ளேன். 'மொட்டு'வின் ஆட்சிதான் இப்போதும் தொடர்கின்றது. தலைமைத்துவத்தில் மாத்திரம்தான் மாற்றம் ஏற்பட்டுள்ளது - என்றார். (ஒ-22)

## தேர்தலுக்குப் பயமில்லையென்றால் உள்ளூராட்சியை நடத்துங்கள்!

### ரணிலின் கூட்டாளிகளுக்கு அநுரகுமார சவால்

கொழும்பு, ஏப். 30

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வும் அவரின் சகாக்களும் தேர்தலுக்கு அஞ்சவில்லையெனில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை உடனடியாக நடத்திக் காட்ட வேண்டும். இவ்வாறு சவால் விடுத்துள்ளார் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயப்படுகின்ற துணிவில்லாத இந்த அரசால் நாடு எப்படி மீண்டெழப்போகின்றது? வாக்குரிமை மக்களின் ஜனநாயக உரிமை. அதை எவராலும் தடுக்க முடியாது. சாக்குப்போக்குக் காரணங்களைச் சொல்லி ஜனாதிபதியும் தேர்தல்கள் ஆணைக்குழுவினரும் சேர்ந்து உள்ளூராட்சிசபைத் தேர்தலைத் திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்துள்ளனர். இதற்கு எதிராக அனைவரும் ஓரணியில் நின்று போராட வேண்டும். மக்கள் ஆணையை இழந்த இந்த அரசு, ஆட்சியில் தொடர்வது வெட்கக்கேடு. எனவே, முதலில் உள்ளூராட்சிசபைத் தேர்தலும், அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலும் விரைந்து நடத்தப்பட வேண்டும் - என்றார். (ஒ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 08 . 1931



மறைவு
24 . 04 . 2023

## புவனேஸ்வரி குமாரசுவாமி

(ஓய்வுபெற்ற ஆசிரியை- யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி)

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி ஒழுங்கை, வடலி அடைப்பைப் பிறப்பிடமாகவும், 2 ஆம் ஒழுங்கை, சிவன்கோவில் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட புவனேஸ்வரி குமாரசுவாமி கடந்த (24.04.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை (ஆசிரியர்) - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்தையா - தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குமாரசுவாமி (எழுதுவினைஞர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற இரகுநாதன் (ஆசிரியர்), குலேந்திரசிங்கம் (ஆசிரியர்) மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவரஞ்சனி (ஓய்வுபெற்ற முகாமையாளர் - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்), சிவகுமாரன் (போதனாசிரியர் - யாழ்ப்பாணக் கல்லூரி, தொழில்நுட்ப நிறுவனம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருபானந்தன், பொன்மதி (அபிவிருத்தி இணைப்பாளர் பிரதேச செயலகம், தெல்லிப்பழை) ஆகியோரின் அன்பு மாமியாரும், துஷ்யந்தி, ஹம்சிகா, சுகதர்சன், சிவகஜனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (24.04.2023) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16/14 2ம் ஒழுங்கை,
சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி. (CS5022)AH-1

தகவல்:
குடும்பத்தினர்.

**077 163 8376**

# மரண அறிவித்தல்

தோற்றம்
14 . 03 . 1937



மறைவு
28 . 04 . 2023

## தவமணி கதிர்காமசேகரம்

பலாலியைப் பிறப்பிடமாகவும், மயிலிட்டி (வடலியடைப்பு), சுன்னாகம் (தில்லைகட்டி) ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தவமணி கதிர்காமசேகரம் நேற்று முன்தினம் (28.04.2023) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமசேகரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - இளையபிள்ளை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற தெய்வானைப் பிள்ளை - சங்கரப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், மனோகரன் (ஓய்வுநிலை ஆசிரியர்), நந்தாகரன், கௌரி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவகி, இந்துமதி (ஆசிரியை - யா/ மயிலணி சைவ மகாவித்தியாலயம்), ஸ்ரீகரன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும், கண்மணி, பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கோகுலன் (தேசிய சேமிப்பு வங்கி - சுன்னாகம்), சோபிதா (ஆசிரியை - யா/ நயினாதீவு மகா வித்தியாலயம்), விதூசன் (உயிரியல் பிரிவு - யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன்), மதாங்கன் (தரம் 9 - யா/ இந்துக்கல்லூரி மாணவன்), இந்துஷா (நோர்வே) ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.05.2023) திங்கட்கிழமை சுன்னாகத்தில் அமைந்துள்ள இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.5, தில்லைகட்டி ஒழுங்கை,
சுன்னாகம். (CS5024)AH-1

தகவல்:
குடும்பத்தினர்.

**077 641 6046, 077 465 6440**

# 16ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர்

## நம்பிராசா கேமாவதி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (01.05.2023) திங்கட்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று **வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை மறுதினம் (02.05.2023) செவ்வாய்க்கிழமை** முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்*

**ந.பிரதீபன் குடும்பத்தினர்**

**வரியப்புலம், சுன்னாகம்.**

தோற்றம்
19.05.1957

மறைவு
16.04.2023

**077 795 6233, 077 284 1508**

(cs 24612) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



நிகழும் சோபகிருது வருடம் சித்திரை மாதம்
**09 ஆம் நாள் (22.04. 2023) சனிக்கிழமை**
சிவபதமெய்திய எமது குடும்பத் தலைவர்

**அமரர்**

### ப்ரம்மஸ்ரீ சு.ஹரிஹர சர்மா
### (ரமணி ஐயா)

**அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள்**
**பின்வரும் தினங்களில் இடம்பெறும்.**

- **01.05.2023 - திங்கட்கிழமை - தசாகம்**
- **02.05.2023 - செவ்வாய்க்கிழமை - ஏகோதிஷ்டம், மாசிகம்**
- **03.05.2023 - புதன்கிழமை - சபிண்டீகரணம்**
- **04.05.2023 - வியாழக்கிழமை - கிருஹயக்ஞம்**

**(ஐங்கரன் மண்டபம் கொட்டாஞ்சேனை நண்பகல் 12.00)**

55/2, 1 /1, 5 ஆவது ஒழுங்கை,
சென் பெனடிக்ற் மாவத்தை,
கொட்டாஞ்சேனை.

**குடும்பத்தினர்.**
**077 087 1728**

(m 24702) (N-1))

## மீனவருக்கு ஓர் நற்செய்தி

**13 H / P இல் இயங்க**
**கூடிய மீன் பிடி பிளாஸ்ரிக்**
**போட் சூரிய மின்**
**உற்பத்தியில் (சோலர் பவர்)**
**இயங்க கூடியவை.**
**மண்ணெண்ணெய், பெற்றோல்**
**போன்ற எரிபொருள்**



**செலவுகள் இல்லாமல் இயங்க வைத்து தரப்படும்.**
இதைப்பற்றி கலந்துரையாட விரும்புவோர் கீழ்காணும் மின்னஞ்சல் முலமாகவோ தொலைபேசி ஊடாக தொடர்புகொள்ளலாம்.

**E-mail: manivasagar@gmail.com**
**T.P.: 077 787 1320**

(cs 50234) (N-1)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05 . 08 . 1992

மறைவு
10 . 05 . 2022

### அமரர் மதுஷன் அகலியா

திதி:- திரயோதசி

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவளாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததம்மா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CR 39753)AH-1

வரணி,
இயற்றாலை, வரணி.

நீங்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

மண்ணில்
13 . 09 . 1922



விண்ணில்
29 . 04 . 2023

### திரு. சின்னப்பா சோமசுந்தரம்

இளவாலை மாரீசன்கூடலைப் பிறப்பிடமாகவும் ஐயனார் கோவில் வீதி வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட திரு.சின்னப்பா சோமசுந்தரம் நேற்று (29.04.2023) சனிக்கிழமை முருகன் அடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பா ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நெல்லிப்பிள்ளை, நன்னித்தம்பி, தில்லையம்பலம், வள்ளியம்மை, பரஞ்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராஜேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சிவசுப்பிரமணியம், சிவசோதி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான வன்னியசிங்கம், இரத்தினகுமாரி ஆகியோரின் மாமனாரும், Dr. சிவேந்திரன் - குகாயினி, காலஞ்சென்ற பிரவீனா மற்றும் கஜேந்திரன் - ஸ்ரீசயனி (கனடா), குணதீபா - சுகந்தன் (கனடா), துர்க்கா - சியந்தன் (லண்டன்), ராம்சீவிகா, சிந்துஜா ஆகியோரின் பேரனும், மித்ரஜித், தக்ஷா, சஞ்சனா, தியானா, ஜியான் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

ஐயனார் கோவில் வீதி,
வண்ணார்பண்ணை.

**077 712 2084, 021 221 9916**

(cs 34661) (N-1)

## மரண அறிவித்தல்

மலர்வு
26 . 09 . 1951



உதிர்வு
28 . 04 . 2023

### திருமதி உமாதேவி கனகநாயகம்

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உமாதேவி கனகநாயகம் நேற்றுமுன்தினம் (28.04.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசசாமி - தில்லைநாயகி தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், கனகநாயகம் (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் ) அவர்களின் அன்பு மனைவியும், சபாநாதன் (லண்டன்), தில்லைநாதன் (கொழும்பு), உஷாதேவி, காலஞ்சென்ற ஸ்ரீதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2023) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று உரும்பிராய் வடக்கு எருளன் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க. கனகநாயகம் - கணவர்**
**(ஓய்வுநிலை கிராம சேவையாளர்)**

கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

**077 1715729, 077 4799202**

(CS/50248)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

1986, (V),அத்த நட்சத்திரம், இரண்டாம் பாதம், 2 இல் செவ்வாய், மொத்த கிரகபாவம் 45 1/2 உள்ள, அரச தொழில் (சாரதி) புரியும் மணமகனுக்கு அரச தொழில், அன்றேல் தனியார் துறையில் தொழில்புரியும் மணமகள் தேவை.

**077 039 9063** (CS/50225)AH-1

## முன்பள்ளி மாணவர்களுக்கான விடேச வகுப்புக்கள்

**ஆரம்பம் 01.05.2023**
**திங்கள் முதல் வெள்ளிவரை**
**மாலை 3 - 5**
மேலதிக விவரங்களுக்கு

**077 284 5124** (CS/50216)AH-1

## Elderly Support Service



We understand the importance of being in a familiar and comfortable environment. We believe that everyone deserves the opportunity to receive quality care without having to leave their homes.

Our services
- Daily follow up call to inquire on their health and well-being
- Assist in utility bill payments
- Weekly groceries to your doorstep
- Medical appointment reminders
- Daily feedback

APEX +94 (0)76 158 8491 @apexhil www.apexhil.com

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஓட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஜந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு, பிள்ளையார் கோயில் வீதி, கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம் கிளை:**
**K.K.S. வீதி, இணுவில்**

## பெண் சமையல் உதவியாளர் தேவை

யாழ்நகரில் இயங்கிவரும் உணவகமொன்றிற்கு பெண் சமையல் உதவியாளர் தேவை.

**077 330 7073**

## மணமகள் தேவை

1989 இந்து, பூரம், Doctor யாழ்ப்பாணம், மணமகன் பதிவு #8274. No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd. Colombo 04. www.EQMarriageService.com

**076 664 9401** (CS9308) N-1

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி முத்துதம்பி பாடசாலைக்கு அருகாமையில் 2 பரப்பும் 2 குழியுடன் கூடிய நிலப்பரப்பு விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)

**077 799 1072**

## பணிப்பெண் தேவை

தெல்லிப்பழையிலுள்ள வீடொன்றில் தங்கிநின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

**074 288 5023** (cs 50221) AN-1

## வீடு விற்பனைக்குண்டு வத்தளை

### ஹெந்தலை வீதி

நீர்கொழும்பு பிரதான வீதிக்கு மிக அருகாமையில் ஹெந்தலை வீதியில் 47 பேர்ச் வர்த்தக காணி பெரிய வீட்டுடன் விற்பனைக்குண்டு. ஹோட்டல், தனியார் விடுதி மேலும் பல வியாபார தேவைக்கு உகந்த வர்தக பாதையில் அமைந்துள்ளது.

### பலகல்ல வீதி

வத்தளை எலகந்தை சந்திக்கு மிக அருகாமையில் பலகல்ல வீதி ஆரம்பிக்கும் இடத்தில் 22 பேர்ச் சதுரகாணி சிறிய வீட்டுடன் விற்பனைக்குண்டு

NO BROKERS

தொடர்பு
K.பத்மநாதன் **0777 317 838**

## மணமகன் தேவை

1982 ரேவதி கி.பா 7 BA பட்டதாரி அரச தொழில்புரியும் விவாகரத்தான மணமகளுக்கு மணமகன் தேவை.

**077 545 2892**

## வேலையாள் தேவை

யாழ்நகரில் இயங்கும் கடையொன்றிற்கு பெண் ஊழியர் தேவை.

**074 288 5023** (cs 50221) (N-1)

## பெண் வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் உள்ள கடை ஒன்றுக்கு காலை 08 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை வேலை செய்யக்கூடிய 18 வயது தொடக்கம் 30 வயதுக்குட்பட்ட பெண் வேலையாள்கள் தேவை.

**சம்பளம் - 37500/=**

**077 937 0000**
**075 988 1000** (CS/50246)AH-1

## விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம். கோண்டாவிலில் 2 1/4 பரப்புடன் நிர்மாணிக்கப்பட்ட சொகுசு வீடு உடனடி விற்பனைக்குண்டு.

**076 058 9822** (CS/9307)AH-1

## மணமகன் தேவை

1994 இந்து, திருவோணம், Doctor மானிப்பாய், பதிவு #9009. No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd. Colombo 04. www.EQMarriageService.com

**076 664 9401** (CS/9309A) AH-1

## UK VI / ILETS வகுப்புக்கள் ஆரம்பம்

**UK VI / ILETS (General / Academic) வகுப்புக்கள் 06.05.2023** ஆரம்பமாகின்றன. முன்பதிவு செய்பவர்களுக்கு 30% கட்டண கழிவு வழங்கப்படும்.

**077 738 3060** (CS/50240)AH-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கட்டப்பிராயில் நி.ப: 1 1/2 2 குழி காணி விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.)

தொடர்பு: **077 072 6782**

## வாத்தியங்கள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள **வீணை, தம்புரா,** ஹார்மோனியம், சுருதிப்பெட்டி விற்பனைக்குண்டு.
K.P. பாலகிருஸ்ணன்
K.K.S. வீதி, பூநாறிமரத்தடி, கொக்குவில்.

**075 043 0845**

## விற்பனைக்கு

**மகேந்திரா 575 உழவு இயந்திரம்**
விற்பனைக்குண்டு.

**077 7871320** (cs 50235) (N-1)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய், மருதனார்மட றோட்டில் இருந்து 500 மீற்றர் தொலைவில் 3 1/2 பரப்பு நீள் சதுர காணி நல்ல தண்ணீர் கிணற்றுடன் உடனடி விற்பனைக்குண்டு. (தூய உறுதி)

**077 297 3725** (CS/9310) AH-1

## மணமகன் தேவை

1995 இந்து, ரேவதி, Doctor தெல்லிப்பழை, பதிவு #8916. No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd. Colombo 04. www.EQMarriageService.com

**076 664 9401** (CS/9309A) AH-1

## மணமகள் தேவை

1991 இந்து, பரணி, Doctor மட்டக்களப்பு, பதிவு #8408. No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd. Colombo 04. www.EQMarriageService.com

**076 664 9401** (CS/9308B) AH-1

## மணிவிழா வாழ்த்து

**யா/ நீர்வேலி றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலையில் 13 வருடங்களாக உப அதிபராகப் பணியாற்றி இன்று 30.04.2023 ஓய்வுபெறும்**

### திருமதி கணேசமலர் சோதிலிங்கம்

(B.A.Dip. in Edu., SLTS - I)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



**சேவை விவரம்**

- கண்டி / ரஜவெல தமிழ் மகாவித்தியாலயம் 15.03.1989 - 25.04.1994
- யா / அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் 26.04.1994 - 08.06.2010
- யா / நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை 09.06.2010 - 30.04.2023

இவர் எமது பாடசாலையில் வழங்கிய சேவையைப் பாராட்டுவதோடு இவரது ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Congratulations

*வாழ்த்துவோர்:*
**ஆசிரியர் கழகம்**
**பாடசாலை நிறைவேற்று குழு / பழைய மாணவர் சங்கம்**
**யா / நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை**

## காணி விற்பனைக்கு

கிழக்கு அரியாலையில் துறவடி பிள்ளையார் ஆலயத்துக்கு அண்மையில் பிரதான வீதியுடன் கிட்டத்தட்ட 100 பரப்புக்கு மேற்பட்ட மேட்டுக்காணி விற்பனைக்குண்டு.

**077 216 3554**
**077 749 6241**

## உடனடியாக பணியில் சேர்வதற்காக நேர்காணல்

இலங்கையில் கட்டுமான துறையில் முதன்மை வகிக்கின்ற நிறுவனம் ஒன்றிற்கு கிளிநொச்சி பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நீர் வழங்கல் திட்டத்துக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள தேர்ச்சி மிக்க வேலையாள்கள் தேவைப்படுகின்றார்கள்.

1. தச்சு வேலையாட்கள்
2. மேசன்கள்
3. வேலையாட்கள்

கவர்ச்சிகரமான சம்பளம், மேலதிக நேர வேலைப்பணம் மேலும் வருகை ஒழுக்கத்திற்கான கொடுப்பனவு என்பன வழங்கப்படும்.

**உடனே அழையுங்கள்**

திரு. பெரேரா : 077 352 5163
திரு. குணபரன் : 077 978 0272

(cr 39686)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளுக்கு நீதிகோரி முல்லையில் போராட்டம்

**முல்லைத்தீவு, ஏப்.30**
**முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்றுக் காலை முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளுக்கான நீதி கோரி போராடிவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கடந்த 2017 மார்ச் 8ஆம் திகதி முதல் முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கையில் நீதியும் கிடைக்காது. இலங்கை அரசின் காணாமற் போனோர் அலுவலகம் இதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட பல ஆணைக் குழுக்கள் எவையும் பயனற்றவை. சர்வதேச நீதிப்பொறிமுறையோ தமக்குத் தேவை என்று வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏழாவது ஆண்டாக தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இலங்கை அரசாங்கம் காணாமற்போனோர் அலுவலகம் ஊடாக சர்வதேச நீதி விசாரணை கோரிக்கையை முடக்கும் வகையில் பல நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது என்றும், தமது உறவுகளை அச்சுறுத்தி விவரங்களைத் திரட்ட முற்படுத்துகின்றது என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இந்தநிலையில், நேற்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் காணாமற்போனோர் அலுவலக விசாரணைகள் முன்னெடுக்கப்படவிருந்த நிலையில் மக்கள் மாபெரும் எதிர்ப்புப் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

எனினும் நேற்று விசாரணைகள் இடம்பெறாது என காணாமற்போனோர் அலுவலகம் அறிவித்திருந்த நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாகத் திரண்டு காணாமற் போனோர் அலுவலக செயற்பாடுகள் தமக்குத் தேவையில்லை என வலியுறுத்தி கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இந்தப் போராட்டம் இடம்பெற்றபோது சிவில் உடையில் வந்த பொலிஸார் மற்றும் இராணுவ புலனாய்வாளர்கள் காணொலி மற்றும் ஒளிப்படம் எடுத்து அச்சுறுத்தல் விடுத்தனர் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர். (ஏ)

## வருடாந்த மஹோற்சவம்

கொடிகாமம், ஏப்.30
மீசாலை வடக்கு வேம்பிராய் கான்றைச் சாட்டி அலாக்கிரக பூதவரத விநாயகர் (கட்டிப் பிள்ளையார்) ஆலயத்தின் மஹோற்சவப் பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும், 8ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (எ-159)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்.30
இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவ சுப்பிரமணியர்சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் தேர்த் திருவிழாவும், மறுநாள் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும், அன்று மாலை கொடியிறக்க உற்சவமும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (எ-66)

## சிற்பத் தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.30
சுன்னாகம் மயிலணி வடக்கு மனோன்மணி அம்பிகை சமேத அண்ணமகேஸ்வரர் ஆலயத்தின் புதிய முக உத்தர சித்திர சிற்பத் தேர் வெள்ளோட்டப் பெருவிழா நாளை திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் நடைபெறவுள்ளது. கலாலய ஷேத்திரத்தின் குரு முதல்வர் ஸ்தபதி.சபரிவாச ஐயப்ப செல்லப்பா சண்முகநாத ஆச்சாரியாரும் அவர் குழுவினரும் புதிய சித்திர சிற்பத்தேரை கலைநயத்துடன் உருவாக்கியுள்ளனர். (எ-66)

# காய்ச்சல் எனில் உடனே மருத்துவரை நாடுங்கள்!

### டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவுறுத்தல்

கொழும்பு, ஏப்.30
நாட்டில் தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக டெங்குத் தொற்று ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தற்போது டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ள நிலையில், காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டால் மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம் என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 29 ஆயிரம் பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ள நிலையில், 15 இறப்புக்கள் பதிவாகியுள்ளன. மேல் மாகாணத்திலேயே அதிகளவிலான டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்தில் 14 ஆயிரம் டெங்குத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். இது டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் 49 சதவீதமாகும். கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகி வருகின்றனர்.

ஒருவர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு இருந்தால் உடனடியாக மருத்துவரை நாடுவது சிறந்தது. தற்போது நிலவும் மழை நிலைமையைக் கருத்தில் கொண்டு தங்கள் குடியிருப்புப் பகுதிகள், பாடசாலைகள், வேலைத்தளங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் டெங்கு நுளம்பு பரவாதவாறு சுத்தம் செய்ய வேண்டும். பணியிடங்கள் மற்றும் தொழிற்சாலைகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் - என்றார். (எ-இ)



## குடும்பஸ்தர் வெட்டிக் கொலை

கொழும்பு, ஏப்.30
நீர்கொழும்பு பொலிஸ் பிரிவில் தமிழ்க் குடும்பஸ்தர் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது என்று நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு, மட்டக்குளியைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நான்கு பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் சபாரத்தினம் (வயது - 51) என்பவரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றிரவு 10 மணியளவில் இவரின் வீட்டுக்குள் வாள்களுடன் புகுந்த இனந்தெரியாத நபர்கள் கொலையைப் புரிந்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. குடும்பஸ்தரின் உடலில் 10க்கும் மேற்பட்ட வெட்டுக் காயங்கள் காணப்படுகின்றன.

சடலம் நீர்கொழும்பு மாவட்ட பொது மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வரும் நீர்கொழும்பு பொலிஸார், கொலைச் சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைதாகவில்லை என்று தெரிவித்தனர். (எ-22)



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் ஞானச்சுடர் சஞ்சிகையின் 304 ஆவது மலர் வெளியிடப்பட்டதுடன், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு மாணவர்களுக்கு இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (எ-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# 'இனவாதி', 'முட்டாள்' கருத்துக்கு மன்னிப்புக் கோரினார் அலிசப்ரி

## வரவேற்றன எதிர்க்கட்சிகள்

கொழும்பு, ஏப். 30

**நாடாளுமன்றத்துக்குப் பொருத்தமற்ற வார்த்தைகளை பிரயோகித்து உரையாற்றியிருந்தால் அதற்கு கவலை தெரிவித்துக் கொள்வதுடன் உரிய நாடாளுமன்ற உறுப்பினரிடம் மன்னிப்புக் கோருகிறேன் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலிசப்ரி சபையில் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற அமர்வின்போது சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் உரையாற்றினார்.

உரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு சென்ற போது ஏற்பட்ட தர்க்கத்தின் போது வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார 'இனவாதி', 'புலி' என இரா. சாணக்கியனை விழித்தார்.

மறுபுறம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலிசப்ரி என்னை இனவாதி, முட்டாள் என்று விமர்சித்தார். நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறும் வகையில் பொருத்தமற்ற வார்த்தைகள் பிரயோகிக்கப்படுகின்றன என சபாநாயகரிடம் இரா. சாணக்கியன் வலியுறுத்தினார்.

அதற்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலிசப்ரி, நாடாளுமன்றத்துக்குப் பொருத்தமற்ற வார்த்தைகளை பிரயோகித்து உரையாற்றியிருந்தால் அந்த வார்த்தைகளை நீக்கிக் கொள்வதுடன் மன்னிப்பும் கோருகிறேன் - என்றார்.

அமைச்சர் அலிசப்ரியின் செயற்பாட்டை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வரவேற்றனர். (ச-இ)

# இலவச அரிசி வழங்கல்: இரண்டாம் கட்டம் ஆரம்பம்



கொழும்பு, ஏப். 30

பொருளாதாரம் நலிவுற்ற குடும்பங்களுக்கான இரண்டாம் கட்ட இலவச அரிசிப் பொதி வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வேலணை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு நிகழ்வு இடம்பெற்றது.

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட 220 பயனாளிகளுக்கு அரிசிப்பொதிகள் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுபா பியும் பாஸ்குவல், ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்க, இலங்கை இராணுவத் தளபதி விக்கும் லியனகே, யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் அ.சிவபாலசுந்தரம், வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், வடபகுதி கடற்படை கட்டளை அதிகாரி, வேலணை பிரதேசசெயலர் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர். (ச)

# ஏற்றுமதித் துறைக்கு மூன்று உப குழுக்கள்

கொழும்பு, ஏப். 30

பொருள்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் எதிர்கால நடவடிக்கைக்காக மூன்று உப குழுக்களை நியமிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன தலைமையில் இந்தக் குழு அண்மையில் நாடாளுமன்றத்தில் கூடியபோது மூன்று உப குழுக்களை ஸ்தாபிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

குழுவின் உறுப்பினர்களால் வழங்கப்பட்ட முன்மொழிவுகளுக்கமைய பெருந்தோட்டக் கைத்தொழில், கைத்தொழில் மற்றும் தொழிநுட்பம், துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள், வர்த்தக, வாணிப மற்றும் உண்வுப் பாதுகாப்பு ஆகிய மூன்று உபகுழுக்களை நியமிப்பது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. (எ-14.இ)

# 15 மாவட்டங்களில் டெங்கு வலயங்கள்



கொழும்பு, ஏப்.30

15 மாவட்டங்களில் உள்ள 55 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, அம்பாந்தோட்டை, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களின் பல பிரதேசங்கள் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவால் வெளியிடப்பட்டுள்ள அண்மைய அறிக்கையில் டெங்கு அபாயப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருந்தன.

தற்போது யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், குருநாகல், கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளும் டெங்கு அபாயப் பகுதிகளில் உள்ளடங்கியுள்ளன. (எ-இ)

# வெளிவிவகார அமைச்சர் தென்கொரியா பயணம்

கொழும்பு, ஏப்.30

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மே 2 முதல் 5 வரை நடைபெறவுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் 56 ஆவது வருடாந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதிநிதித்துவப் படுத்தி தென்கொரியாவின் இன்சியான் நகருக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தக் கூட்டம் நிதி அமைச்சர்கள், மத்திய வங்கிகளின் ஆளுநர்கள், உலகளாவிய வங்கிகள், நிறுவனங்கள் மற்றும் மூத்த ஊடகப் பிரதானிகள் உட்பட சுமார் 3 ஆயிரம் முதல் 4 ஆயிரம் பங்கேற்பாளர்கள் கலந்துகொள்ளும் ஓர் உயர்மட்ட நிகழ்வாகும்.

மே 4ஆம் திகதி இடம்பெறவுள்ள ஆளுநர்களுக்கான வர்த்தக அமர்வில் இலங்கையின் தற்போதைய பொருளாதார முன்னேற்றங்கள் தொடர்பான அறிக்கையை, வெளிவிவகார அமைச்சர் அங்கு சமர்ப்பிக்கவுள்ளார்.

இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கான தற்போதைய ஈடுபாடுகள் குறித்து கலந்துரையாடுவதற்காக, இந்த நிகழ்வின் பக்க அம்சமாக பல நாடுகளின் பிரதிநிதிகளுடன் இருதரப்பு சந்திப்புகளில் ஈடுபடுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (எ-14.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னணியின் மேதினம் இம்முறை முல்லைத்தீவில்

முல்லைத்தீவு, ஏப். 30
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் இணைந்து நடத்தும் சர்வதேச தொழிலாளர் தினப் பொதுக்கூட்டம் முல்லைத்தீவு, துணுக்காய் - மல்லாவியில் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. மேதினப் பேரணி 1ஆம் யுனிட் சந்தி, புகழேந்திநகரில் ஆரம்பமாகும்.

தாயகம், தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் தீர்வுக்காகவும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டறிவதற்கும், தமிழ் இனப்படுகொலைக்கான நீதிக்குமாகவும் சர்வதேச குற்றவியல் விசாரணையை வலியுறுத்தியும், தமிழ்த் தேச தொழிலாளர்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகவும், தமிழ்த் தேசத்திலுள்ள விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகவும், திட்டமிட்ட சிங்கள - பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும், முழுமையான மீள்குடியேற்றத்தை வலியுறுத்துதல், இராணுவ மயமாக்கலை தடுத்தல், கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வலியுறுத்தியும், புதிதாகக் கொண்டுவரப்படும் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்க வலியுறுத்தியும் நடைபெறவுள்ள தமிழ்த் தேசிய மேதின எழுச்சிப் பேரணியில் அனைத்துத் தமிழ் மக்களையும் அணிதிரளுமாறு அந்தக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது. (அ-ஒ,66,125)

# முட்டை நிர்ணய விலை நீக்குவதற்கு அவதானம்

முட்டைக்கு விதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச சில்லறை விலையை நீக்குவது தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

முட்டை உற்பத்தியாளர்கள், கோழிப் பண்ணையாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு இடையில் நேற்று முன்தினம் பிரதமர் அலுவலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் கோழிவளர்ப்பு மற்றும் முட்டைத் தொழிலில் தற்போது ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. முட்டைக்கு விதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச சில்லறை விலையை நீக்க நடவடிக்கை எடுத்தால் உள்ளூர் சந்தையில் நிலவும் முட்டை தட்டுப்பாட்டை 15 நாள்களுக்குள் நீக்க முடியும் என கோழிப்பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டினர்.

அதிகபட்ச சில்லறை விலையை நீக்குவது தொடர்பான யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பிக்க கவனம் செலுத்தப்படும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். (ச-இ)

# மூளாயில் தாக்குதல்

மூளாயில் கூரிய ஆயுதத்தால் நேற்றுத் தாக்கப்பட்ட ஒருவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பி.லகீஸ்வரன் (வயது - 42) என்பவரே இவ்வாறு காயமடைந்துள்ளார். தனிப்பட்ட பகைமை காரணமாக இவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ,125)

# பௌஸிக்கு எதிராக ஐ.ம.ச. நடவடிக்கை

கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்த நாடாளுமன்ற உறுப்பினர் பௌஸிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான ஏற்பாட்டை அமுல்படுத்துவதற்கான பிரேரணை மீது நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் பங்கேற்பதில்லை என்ற முடிவை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எடுத்திருந்தது. எனினும், வாக்கெடுப்பில் பங்கேற்று பிரேரணைக்கு ஆதரவாக பௌஸி வாக்களித்தார்.

இந்நிலையிலேயே அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்போவதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது. கொழும்பு மாநகரசபை தேர்தலில் போட்டியிடுவதற்காக நாடாளுமன்ற உறுப்புரிமையை முஜிபூர் ரஹ்மான் இராஜினாமாச் செய்தார். இதனையடுத்தே பௌஸி நாடாளுமன்றம் வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

# 33 வீதமான குடும்பங்களுக்கு முறையற்ற விதத்தில் சமுர்த்தி

சமுர்த்தித்திட்டத்தைத் தற்போது பெற்றுக்கொண்டுள்ள குடும்பங்களில் ஏறத்தாழ 33 வீதமானவை சமுர்த்தியின் பயனைப் பெறத் தகுதியற்ற குடும்பங்கள் என்று 'கோபா' குழுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சமுர்த்தித் திணைக்களத்தின் 2019, 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் செயலாற்றுகை அறிக்கை குறித்து ஆராயும் நோக்கில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா குழு) அதன் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தலைமையில் அண்மையில் நாடாளுமன்றத்தில் கூடியபோதே இந்த விடயங்கள் தெரியவந்தன.

2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் நாடு முழுவதையும் உள்ளடக்கும் விதத்தில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் ஊடாக இது தெரியவந்திருப்பதாகவும், 4 இலட்சத்து 49 ஆயிரத்து 979 குடும்பங்கள் சமுர்த்திபயனாளிகளிலிருந்து நீக்கப்படவேண்டும் என்றும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. (அ-ம)

## பொலிஸாருக்கு கத்தியைக்காட்டி
# மோட்டார்சைக்கிளை விட்டு தப்பியோடிய இளைஞர்கள்

யாழ்ப்பாணம், ஏப். 30
கோப்பாய் பொலிஸாருக்கு வீதியில் வைத்து கிறீஸ் கத்தியைக் காண்பித்து அச்சுறுத்திய இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளை கைவிட்டு தப்பித்துள்ளனர். உரும்பிராய் சந்தியில் நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வீதிப் போக்குவரத்து ஒழுங்கு பணியில் ஈடுபட்டிருந்த கோப்பாய் பொலிஸார், மோட்டார் சைக்கிளில் வந்த இருவரை மறித்து சோதனையிட முற்பட்டனர். அதன்போது பொலிஸாருக்கு கிறீஸ் கத்தியைக் காண்பித்த அவர்கள் மோட்டார் சைக்கிள், தேசிய அடையாள அட்டை என்பவற்றைக் கைவிட்டு தப்பி ஓடியுள்ளனர். அவற்றை மீட்ட பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பிப்பதற்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர். இதேவேளை, மோட்டார் சைக்கிளை நீதிமன்றில் பாரப்படுத்தாது விடுவிப்பதற்கு பல மட்டங்கள் ஊடாக முயற்சிகள் எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-ஒ,26)

## கந்தரோடையில்...

சுன்னாகம், கந்தரோடையில் தமிழ் - பௌத்த எச்சங்கள் காணப்படுகின்றன. இவை தொல்லியல்திணைக்களத்தின் கண்காணிப்பில் உள்ளன. இந்த நிலையில் இதன் எல்லையிலுள்ள தமிழர் ஒருவரின் 6 பரப்புக் காணியை தென்னிலங்கையைச் சேர்ந்த பிக்கு ஒருவர் ஒரு வருடத்துக்கு முன்னர் வாங்கியுள்ளார்.

அந்தக் காணியில் விகாரை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார். அருகில் தொல்லியல் திணைக்களத்துக்குச் சொந்தமான எச்சங்கள் காணப்படுவதால், தனியார் காணியில் விகாரை அமைப்பது ஏதாவதுவகையில் இடையூறாகுமா என்றும் விகாரையை அமைக்க முடியுமா எனவும் கேட்டு தொல்லியல் திணைக்களத்துக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் கடிதம் அனுப்பியுள்ளார்.

அவரது கடிதத்தை சாதகமாக பரிசீலித்துள்ள தொல்லியல் திணைக்களம் விரைவில் விகாரையை அமைக்க அனுமதி வழங்கவுள்ளதாக அறியமுடிகின்றது. இதனையடுத்து கட்டுமானப் பணிகளை விரைந்து தொடங்குவதற்கான ஏற்பாடுகளையும் பிக்கு முன்னெடுத்து வருகின்றார்.

தமிழர் தாயகத்தில் தொடர்ச்சியாக மத ரீதியான ஆக்கிரமிப்புக்கள் முடுக்கிவிடப்பட்டுள்ள சூழலில் இவ்வாறானதொரு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,5,125)

## பேருந்தை...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று இரவு 8 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்து பயணித்த கோப்பாய், பூதர்மடத்தைச் சேர்ந்த தவசீலன் விநோயன் (வயது-20) என்ற இளைஞரே உயிரிழந்ததாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து அச்சுவேலி நோக்கி இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து பயணித்துள்ளது. பேருந்தின் பின்னால் மோட்டார் சைக்கிள் பயணித்துள்ளது. கோப்பாய், பூதர்மடச் சந்தியில் பேருந்தை முந்திச் செல்வதற்கு மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் முயன்றுள்ளனர். இதன்போது எதிர்திசையில் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த காருடன் அவர்கள் மோதுண்டுள்ளனர். சம்பவ இடத்திலேயே மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் உயிரிழந்தார். மற்றையவர் காயங்களுடன் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

பேருந்துச் சாரதி மற்றும் கார் சாரதி இருவரும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்று இரவு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. (ஒ,17,26,125)

## தவறான...

54 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இந்தத் தகவலை யாழ். மாவட்ட பொலிஸ் பிராந்திய அத்தியட்சகர் டபிள்யூ.ஏ.ஜகத் விசாந்த மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய அத்தியட்சகர் எம் டபிள்யூ சந்தனகமகே ஆகியோர் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு 175 பேர் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளனர். இவர்களில் 9 பேர் 18 வயதுக்குட்பட்டவர்கள். 166 பேர் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள். இவர்களில் காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் 116 பேரும், யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்தியத்தில் 59 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் வாரம் வரையில் 54 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் 2 பேர் 18 வயதுக்கு உட்பட்டவர்கள். 42 பேர் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள். காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் 39 பேரும், யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்தியத்தில் 15 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை- தவறான முடிவு எடுத்து உயிரிழக்க முற்பட்டவேளை காப்பாற்றப்பட்ட சுமார் 50 பேர் வரையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இந்த ஆண்டு சிகிச்சை பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தவறான முடிவு எடுத்து உயிரிழக்க முற்படுவது தண்டனைக்குரிய குற்றம் என்று பொலிஸார் குறிப்பிடுகின்றனர். (அ-ஒ,125)

## விபத்தில்...

துள்ளான். சாரையடி, புலோலியைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி சத்யன் (வயது - 27) என்ற தனியார் வங்கி ஊழியரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி நண்பர்களுடன் சுற்றுலாவுக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்தபோது கிளிநொச்சி, உமையாள்புரத்தில் மாலை 4 மணியளவில் இவர் விபத்துக்குள்ளாகியுள்ளார். யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற ஹைஏஸ் வாகனம் மத்திய வெள்ளைக்கோட்டை தாண்டி எதிர்பக்கமாகச் சென்று மோதியுள்ளது. விபத்தில் காயமடைந்த இளைஞன் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கடந்த 24ஆம் திகதி மாற்றப்பட்டுள்ளார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு இளைஞர் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ஒ,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்...

அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கில் கடந்த 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பொதுமுடக்கம் முன்னெடுக்கப்பட்டது. மக்களின் பேராதரவுடன் பொதுமுடக்கம் வெற்றிபெற்றது. இது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று கொழும்புச் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

'பொதுமுடக்கத்தை ஒரு தரப்பினர் வெற்றி என்று சொல்வார்கள். மற்றொரு தரப்பினர் தோல்வி என்பார்கள். ஆனால், பொதுமுடக்கத்தை அமைதியாக மக்கள் முன்னெடுத்தார்கள். அவர்களின் கோரிக்கைகளில் ஒன்று சில தினங்களுக்கு முன்னர் நீதிமன்றம் ஊடாக நிறைவேற்றப்பட்டுள்ளது. எஞ்சிய கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது' - என்றார் ரணில். (அ-ஒ.5,22)

## சரக்குக்...

காரைக்கால் - காங்கேசன்துறை பயணிகள் கப்பல் சேவையைத் தொடர்ந்து சரக்குக் கப்பல் சேவையையும் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. சரக்குக் கப்பல் சேவையை இந்தியாவின் காரைக்காலிலிருந்தா சென்னையிலிருந்தா ஆரம்பிப்பது என்பதில் இழுபறி நீடித்தது. தற்போது இதற்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

காரைக்காலிலிருந்தே காங்கேசன்துறைக்கான கப்பல் சேவை நடத்தப்படவுள்ளது. இந்தக் கப்பல் சேவையை இலங்கையைச் சேர்ந்த ஹேலீஸ் நிறுவனம் முன்னெடுக்கவுள்ளது. இந்தியாவைச் சேர்ந்த சரக்குக் கப்பல் இந்தப் போக்குவரத்தில் ஈடுபடவுள்ளது. ஒரே தடவையில் 350 மெற்றிக் தொன் பொருள்கள் கொண்டுவரமுடியும். இதேவேளை- பயணிகள் கப்பல் சேவைக்கான பயணச் சீட்டு முகவராக தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒருவரே நியமிக்கப்பட்டிருந்த நிலையில் இலங்கையைச் சேர்ந்த ஹேலீஸ் நிறுவனத்துக்கும் அது வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.5)

## மாகாணத்...

கடும்தொனியில் அழுத்தமாகத் தெரிவித்து வருகின்றோம். இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களிடம் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனின் கோரிக்கைக்கு அமைவாக, அந்தக் கூட்டணியின் கட்சித் தலைவர்களுடனான சந்திப்பு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான கோவிந்தன் கருணாகரம், அந்தக் கட்சியின் பேச்சாளர் சுரேன் குருசாமி, புளொட் சார்பில் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடந்த டிசெம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தப்போவதாகத் தெரிவித்தார். அதனை ஆதரிக்கின்றீர்களா என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரிடம் கேட்டார். அவர்களும் தாம் எதிர்ப்பில்லை என்று பதிலளித்தனர். ஆனால், 4 மாதங்கள் கடந்தும் அதில் எந்தவொரு முன்னேற்றமும் இல்லை.

மாறாக தமிழர் தாயகத்தை கபளீகரம் செய்யும் முயற்சிகள்தான் நடக்கின்றன. இந்து ஆலயங்கள் இடிக்கப்படுகின்றன. பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன. வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தை பௌத்த - சிங்கள மயமாக்கும் வகையில் இங்கு முக்கியமான பதவிகளுக்கு சிங்களவர்களை நியமிக்கின்றார்கள்.

இலங்கையை பொருளாதார நெருக்கடியிலிருந்து இந்தியாவே பிணையெடுத்தது. எனவே 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது, மாகாணசபைத் தேர்தலை நடத்துவது மற்றும் நல்லிணக்க குரோத செயற்பாடுகளை நிறுத்தச் சொல்வது உள்ளிட்ட விடயங்களை இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தமாக - உரிமையுடன் இந்தியாவால் சொல்லமுடியும்.

குறைந்தபட்சம் 13ஆவது திருத்தத்தை ஒப்பந்தத்தில் உள்ளவாறு முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும். அத்துடன் ஆகக்குறைந்தது வடக்கு - கிழக்கு மாகாணசபைகளுக்காவது தேர்தலை நடத்தக்கோரவேண்டும். இதனை இந்தியா செய்விக்கவேண்டும் என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இந்தியா போதியளவு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்திய பின்னரே ஏனைய தேர்தல்களை நடத்த அரசாங்கம் திட்டமிடுகின்றது என்பதையும் தூதுவருக்கு அவர்கள் சுட்டிக்காட்டினர். இதன் பின்னர் இந்தியத் தூதுவர் பதிலளித்துள்ளார். நாம் இலங்கை அரசுக்கு கடுமையான அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றோம். எமது அழுத்தங்கள் கடும்தொனியில்தான் உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஊடகங்களுக்கு எதுவும் தெரிவிக்கவேண்டாம் என்று இந்தியத் தூதரக அதிகாரிகள் கூட்டணித் தலைவர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளனர். இந்தியத் தூதரகமே இது தொடர்பான பத்திரிகை அறிக்கையை பின்னர் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.5)

## மின்சாரம்...

நா.கபிலன் (வயது - 29) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வவுனியா, எல்லப்பர் மருதங்குள ஆலயத்தில் பூசை வழிபாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது மின்சார வயரை இளைஞர் எடுத்துள்ளார். அந்த வயரில் மின்சார ஒழுக்கு இருந்தமையால் மின்சாரம் தாக்குண்டு இளைஞர் உயிரிழந்துள்ளார். (அ-ஒ.18,110)

## கப் வாகனம்...

உரும்பிராய் வடக்கு உரும்பிராயைச் சேர்ந்த கனகநாயகம் உமாதேவி (வயது - 72) என்பவரே நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

உமாதேவி தனது பிறந்த இடமான ஊரெழுவுக்குச் சென்று விட்டு துவிச்சக்கரவண்டியில் உரும்பிராயில் அமைந்துள்ள வீடு நோக்கி பயணித்துள்ளார். ஊரெழு பர்வதவர்த்தனி மனோன்மணி அம்மன் ஆலயத்துக்கு அருகில் பலாலி வீதியில் மஞ்சள் கடவையின் எல்லையில், பின்னால் வேகமாக வந்த பட்டா ரக வாகனம் மூதாட்டியை மோதித் தள்ளியது. அவர் தூக்கி வீசப்பட்டுத் தலையில் படுகாயமடைந்து சுயநினைவற்று ஆபத்தான நிலையில் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டுள்ளார். பின்னர் பட்டா ரக வாகனத்தில் வந்தவர்களே மூதாட்டியை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கொண்டு சென்று ஒப்படைத்துள்ளனர். எனினும், ஒப்படைத்தவுடனேயே அவர்கள் அங்கிருந்து நழுவியுள்ளனர். தலையில் படுகாயமடைந்தமையால் மூளைக்கும் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் அவர் நேற்றுமுன்தினம் நள்ளிரவு உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில் விபத்துக்குக் காரணமான பட்டா வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை- விபத்து ஏற்படும் போது தனது மனைவி அணிந்திருந்த தங்கச் சங்கிலி, மோதிரம், காப்பு உள்ளிட்ட ஆறு பவுண் தங்க நகைகள் மருத்துவமனையில் ஒப்படைக்கப்படுவதற்கு முன்பாக அபகரிக்கப்பட்டுள்ளதாக உயிரிழந்த மூதாட்டியின் கணவரான ஓய்வுநிலைக் கிராமசேவகர் கனகநாயகம் தெரிவித்தார். (ஒ.26,66)


### மணமகன்கள் தேவை

28, 30 வயதுகளையுடைய
கனடாவில் வசிக்கும்
மணமகள்களுக்கு அவுஸ்திரேலிய
குடியுரிமை பெற்ற
(29) வயதுள்ள பெண்ணுக்கும்
மணமகன்கள் தேவை.
மேலதிக தொடர்புக்கு
**076 020 9066** (CS/50243) AH-1

### வீட்டுப் பணிப்பெண் தேவை

கோண்டாவில் கிழக்கு, பலாலி வீதியில்
அமைந்துள்ள (கோண்டாவில்
சந்தியிலிருந்து 250 m தொலைவிலுள்ள)
சிறியகுடும்பத்திற்கு முழுநேர/ பகுதிநேர
வேலையாள் தேவை. சம்பளம் நேரில்
பேசித் தீர்மானிக்கப்படும்.
**076 757 6704**

### காணி விற்பனைக்கு

வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட
வீதியில் ஒரு பரப்பு மற்றும் இரண்டு பரப்பு
உறுதிக்காணிகள் விற்பனைக்குண்டு
- தங்குவிடுதி மற்றும் வீடமைப்பிற்கு உகந்தது
- மொத்தம் ஆறு பரப்பு உண்டு.

**077 735 4470**

### காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)
- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி 100 m தூரத்தில்)
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- தண்ணீருற்று நிலம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்
- 1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும் (120,000/=)

பார்வையிடும் நேரம் : காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை
தொடர்பு:-076 755 8606 077 638 5683

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **கைதடி** A-9 **பிரதான வீதியுடன்** 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்

**பார்வையிடும் நேரம்:-**
**காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

**தொடர்புகளுக்கு: ஜெயம்**
**077 8147 389**
**077 9865 457**

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**
- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 24 உள்ளன.
- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- ஒரு பரப்பின் விலை 19 இலட்சம் முதல் 17 இலட்சம் வரை

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**
தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு: ஜெயம்**
**077 8147 389**
**077 9865 457**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீங்களும் சட்ட வல்லுநர் ஆவதா???
இதோ சட்டக்கல்லூரியை அடைவதற்கான
அரிய சந்தர்ப்பம் (LLB ( Hons)
IDM NATIONS CAMPUS INTERNATIONAL JAFFNA CAMPUS

- A/L பெறுபேற்றை பெற்ற மாணவர்களுக்கான சட்டமாணி கற்கை நெறியானது ஆரம்பமாகவுள்ளது.
- இக் கற்கை நெறியினை A/L பரீட்சையில் சித்தி பெற்றவர்களும் சட்டமாணி பட்டப்படிப்பை தொடர முடியும்.
- எமது நிறுவனம் 10 வருடங்களுக்கு மேலாக இக்கற்கை நெறியினை சிறப்பாக நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.
- UGC அங்கீகாரம் பெற்ற சட்டகற்கைநெறிக்கு தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றான Buckinghamshire New University, UK ன் மாணவராக இணைந்து கொள்ளுங்கள்.
- சட்டமாணி கற்கைநெறியினை பூர்த்தி செய்வதன் மூலம் கீழ்வரும் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளலாம்.
  - ✓ சட்ட ஆலோசகர்
  - ✓ இலஞ்ச ஊழல் விசாரணை அதிகாரி
  - ✓ வழக்கறிஞர்
  - ✓ உறுதி எழுதுதல்
  - ✓ நீதிசேவைக்குள் உள்வாங்கப்படல் (நீதிபதி )
  - ✓ அரச அல்லது வங்கி போன்ற தனியார் நிறுவனங்களில் சட்ட உத்தியோகத்தர்.
  - ✓ முறைப்பாட்டு அலுவலர்
  - ✓ சட்ட அமுலாக்க அதிகாரி
  - ✓ நீதிமன்றத்தில் வழக்காடுதல்.
  - ✓ கம்பெனி செயலாளராக செயற்படல்.
  - ✓ கல்வி நிறுவனங்களில் விரிவுரைகள் நடாத்துதல்.

வகுப்புகள் முழுநேரமாகவும், பகுதி நேரமாகவும் நடைபெறும்.

தொடர்புகளுக்கு :Legal Studies Department
IDM Nations Campus International
Ariyakulam Junction, Jaffna.
021 222 2163
077 762 7941
(CR 39754)A-1




## வீடு / காணி விற்பனைக்கு
கொக்குவில் மேற்கு KKS வீதிக்கு அண்மையாக 4 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
077 841 1895, 077 077 9026

## தேவை
பாவித்த அங்கவீனர் பாவிக்கும் மூன்று சக்கர மோட்டார் சைக்கிள் மற்றும் TVS Scooty Pept மோட்டார் சைக்கிள் தேவை.
077 247 4740, 077 247 4714

## காணி விற்பனைக்கு
திருநெல்வேலி மருத்துவ பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு.
(தரகர் தேவையில்லை)
தொடர்பு: 077 209 8826

## வீடு வாடகைக்கு
கலாசாலை வீதி, திருநெல்வேலியில் 3 அறைகள், ஹோல், சமையலறையுடன் அமைந்த புத்தம் புதிய ஆடம்பர வீடு மாத வாடகைக்கு உண்டு.
077 983 6719, 077 926 5264

## காணி விற்பனைக்கு உண்டு
- ✱ யாழ்ப்பாணம் புத்தூரில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
நிலப்பரப்பு
- ✱ பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- ✱ மூன்று பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
- ✱ நன்னீரூற்று
- ✱ குடியிருப்பு சூழவுள்ள பகுதி

பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
(முழுக்காணி களும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது).
(ஒரு பரப்புக் காணியின் விலை மூன்று இலட்சம் ( 300,000/− )



தொடர்பு:
077 4683 354
076 9119 371
076 7390 413

## மணப்பெண் தேவை
இந்து கௌரவகுலம் (V), 1992 ஆம் ஆண்டு பிறந்த 2இல் செவ்வாய் பொலிஸாக பணிபுரியும், சொந்த இடம் பருத்தித்துறை தற்பொழுது மன்னாரில் வசிக்கும் மணமகனுக்கு மணப்பெண் தேவை.
077 301 9182

## வீடு வாடகைக்கு
சாவகச்சேரி, கச்சாய் றோட், கைலாசபிள்ளை வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
076 994 9854

## வீடு வாடகைக்குத் தேவை
யாழ்நகரில் பருத்தித்துறை வீதி, பலாலி வீதி, கே.கே.எஸ். வீதி போன்ற பிரதான வீதிகளை அல்லது நகர்ப்புற பகுதிகளை அண்மித்த இடங்களில் நல்ல சுற்றுப்புறச்சூழலில் மூன்று (03) அல்லது நான்கு (4) அறைகள் மற்றும் இரண்டு (2) குளியலறைகள் கொண்ட நன்கு பராமரிக்கப்பட்ட வீடொன்று வாடகைக்குத் தேவை. குறைந்தபட்சம் இரண்டு வருட வாடகைக்காலம் மற்றும் நியாயமான வாடகை எதிர்பார்க்கப்படுகின்றது.
077 890 3904 , 077 485 7552

## காணி விற்பனைக்கு
யாழ். நாவற்குழி A-09 வீதியில் இரண்டாம் காணி 08 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
- ✓ இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓ குடியிருப்பு உள்ள சூழல்
- ✓ நன்னீரூற்று சூழல்
- ✓ 1 பரப்பின் விலை 650,000/= ரூபா மட்டும்.

076 4365 814, 077 0654 525

## விற்பனைக்கு
உணவகமொன்றில் பாவிக்கப்பட்ட அனைத்து சமையலறை உபகரணங்களும் உடன் விற்பனைக்குண்டு.
075 549 4934

## காணி விற்பனைக்கு
உரும்பிராய் மருதனார்மட வீதியில் இரண்டாவது ஒழுங்கையில் (சிவதலவீதி) 29 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. இக்காணி 2 பரப்பாக பிரித்து தரப்படும்.
077 366 8282

## பணியாளர்கள் தேவை
யாழ்ப்பாணத்திலுள்ள சுற்றுலா விடுதியொன்றிற்கு கீழ்வரும் பணிகளுக்காக விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது
- சமையலாளர் - யாழ்ப்பாணத்து பாரம்பரிய உணவு வகைகள் செய்யத் தெரிந்திருத்தல் வேண்டும்.
- சமையல் உதவியாளர்
- பாதுகாவலர்
- தோட்டப்பராமரிப்பாளர்
- வரவேற்பாளர் (Receptionist)

(முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது)
- ஆண், பெண் (இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
- நேரில் சமூகமளிக்கவேண்டிய முகவரி:

195, Temple Road, Jaffna.
தொடர்பு: 077 872 9806, 077 251 4986
- தபால் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி

விளம்பர இல. 1043
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# அறிவித்தல்
சீரணி நாகபூசனி அம்மன்
வருடாந்த மஹோற்சவ
மஞ்சத்திருவிழா-2023



திருவிழாவில் நடைபெறவிருந்த மாபெரும் இசை நிகழ்ச்சி, சிறப்பு தவில் நாதஸ்வர கச்சேரி, இரவு நிகழ்ச்சிகள் யாவும் 03.05.2023 அன்று நடைபெறாது என்பதனை விழா உபயகாரரால் அறியத்தரப்படுகின்றது.

சீரணி நாகபூசனி அம்மன் மஞ்சத்திருவிழா
உபயகாரர்.
இ.குமார் (லண்டன்)
(CR 38727) A-1

## வீடு வாடகைக்கு
பருத்தித்துறை 4 ஆம் குறுக்குத் தெருவில் 3 படுக்கை அறைகள் வரவேற்பறை, கழிவறை, இணைந்த குளியலறை மற்றும் வாகனத்தரிப்பிட வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. (அமைதியான சூழல்)
077 210 3143

## காணி விற்பனைக்கு
A9 வீதிக்கு அருகில் அமைந்துள்ள பனிக்கர் நீராவி, புளியங்குளத்தில் இரண்டு ஏக்கர் கொண்ட உறுதிக் காணிகள் விற்பனைக்கு உண்டு.
- ✓ எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் களஞ்சியசாலை அமைப்பதற்கு உகந்தது.
- ✓ மொத்தமாக எட்டு ஏக்கர் உண்டு.
- ✓ மாங்கன்றுகள் மற்றும் தென்னங்கன்றுகள் நடப்பட்டுள்ளது.

077 735 4470


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 மின்னஞ்சல் : news@uthayan.com displayadvt@uthayan.com
இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

சஞ்சீவி

Registered as a Newspaper

பணமிருக்கும் மனிதரிடம் மனமிருப்பதில்லை
மனமிருக்கும் மனிதரிடம் பணமிருப்பதில்லை
பணம் படைத்த வீட்டினிலே வந்ததெல்லாம் சொந்தம்
பணமில்லாத மனிதருக்கு சொந்தமெல்லம் துன்பம்

- கண்ணதாசன்

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2053 | சித்திரை : 17 | ஞாயிற்றுக்கிழமை (30.04.2023) | சிகரம் : 144



# கடையடைப்புத் தேவையா?

○ நிலாந்தன்

நேற்றுமுன்தினம், வெள்ளிக்கிழமை, வெடுக்குநாறி மலையில் பூசைகள் நடக்கத் தொடங்கியுள்ளன. வியாழக்கிழமை கச்சதீவிலிருந்து புத்தர் சிலை அகற்றப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த கடையடைப்பு, அதற்கு அழைப்பு விடுத்த கட்சிகளைப் பொறுத்தவரை வெற்றிதான். எனினும், கடந்த வியாழக்கிழமை, யாழ்ப்பாணம், தையிட்டியில் தனியார் காணியில் இராணுவம் கட்டிய பெரிய விகாரையில் பூசை நடந்திருக்கிறது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த ஒரு நாள் கடையடைப்பு தொடர்பாக மூன்று விதமான விமர்ச னங்கள் உண்டு. முதலாவது அதனால் எந்தப் பயனும் இல்லை. அது கொழும்புக்கு நோகாத ஒரு போராட்டம் என்பது. இரண்டாவது அது அன்றாடங் காய்ச்சிகளின் வயிற்றிலடிப்பது என்பது. மூன்றாவது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறும் விமர்சனங்கள். இவை மூன்றையும் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

முதலாவதாக இது போன்ற போராட்டங்களால் பயன் இல்லை என்பது. இந்த ஒரு நாள் போராட்டம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது என்பது உண்மை. தமிழ் மக்கள் இதைவிடப் பெரிய போராட்டத்தை நடத்திய மக்கள். இதுபோன்ற ஒருநாள் கடையடைப்புக்கள் கொழும்பின் கவனத்தையோ உலகத்தின் கவனத்தையோ தொடர்ச்சியாக ஈர்த்து வைத்திருக்கப் போதுமானவை அல்ல. எனினும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராகவும் சிங்கள - பௌத்தமயமாக்கலுக்கு எதிராகவும் தமிழ்மக்கள் போராட வேண்டியிருக்கிறது. வடக்கு - கிழக்கு இணைந்து ஒப்பீட்டளவில் ஒரு பெரிய திரளாக தமிழ் மக்கள் தமது எதிர்ப்பைக் காட்டியிருக்கிறார்கள். ஒன்றையும் செய்யாமலிருந்து வெறுவாய் சப்புவதைவிட இது பரவாயில்லை.

அதேசமயம், கடந்த ஆண்டு தென்னிலங்கையில் தோன்றிய தன்னெழுச்சிப் போராட்டங்களோடு ஒப்பிடுகையில் இதுபோன்ற கடையடைப்புகள் படைப்புத்திறன் குறைந்தவை. யாந்திரீகமானவை. இந்த விடயத்தில் தமிழ்க் கட்சிகள் தென்னிலங்கையிடமிருந்து எதையுமே கற்றுக்கொள்ளவில்லை. சமூக வலைத்தளங்களில் சிலர் விமர்சிப்பதைப் போன்று இது அரசியல்வாதிகளின் இயலாமையைக் காட்டுகிறது. ஒரு புதிய மக்கள் போராட்ட வடிவத்தைக் குறித்துச் சரியான விளக்கமோ, விசுவாசமான தேடலோ, தீர்க்கதரிசனம் மிக்க வழி வரைபடங்களோ இல்லாத வெற்றிடத்தில்தான் இது போன்ற யாந்திரீகமான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே கடையடைப்பு ஒரு விதத்தில் தமிழ் அரசியலின் இயலாமையைக் காட்டுகிறது என்றும் சொல்லலாம்.

இரண்டாவது இந்தப்போராட்டத்தால் அன்றாடங் காய்ச்சிகள் பாதிக்கப்பட்டார்கள் என்பது. அது உண்மை. அரசியல்வாதிகள் அநேகமாக அன்றாடங் காய்ச்சிகள் இல்லை. அன்றன்று உழைப்பவர்கள் இதுபோன்ற போராட்டங்களால் பாதிக்கப்படுவார்கள். ஆனால் ஒரு மக்கள் கூட்டம் தன் அரசியல் இலக்குகளை அடைவதற்காகச் செய்யக்கூடிய தியாகங்களுக்குள் அந்த ஒரு நாள் உழைப்பும் அடங்கும். தமிழ் மக்கள் இதைவிடப் பெரிய தியாகங்களைச் செய்த மக்கள். ஒரு நாள் உழைப்பைக் காட்டி இதுபோன்ற போராட்டங்களைக் கொச்சைப்படுத்தமுடியாது.

மூன்றாவது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வைக்கும் விமர்சனங்கள். அவை வழமையான வாய்ப்பாட்டு விமர்சனங்கள்தான். போராட்டத்துக்கு அழைப்பு விடுத்த ஏழு கட்சிகளுக்கும் அதற்குத் தகுதி இல்லை. அவர்கள் விசுவாசமாகப் போராடவில்லை என்ற பொருள்பட முன்னணி குற்றம் சாட்டியிருக்கிறது. பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராகவும் தமிழ்மக்கள் போராட வேண்டும். அது அரசுக்கு எதிரான போராட்டம். அந்தப்போராட்டத்தை எதிர்ப்பது அதன் தர்க்கபூர்வ விளைவாக யாருக்குச் சேவகஞ் செய்யும்?.

அந்த ஏழு கட்சிகளுக்கும் போராடும் தகமை இல்லையென்றால் அல்லது அவை விசுவாசமாகப் போராடவில்லையென்றால், விசுவாசமான ஒரு போராட்டத்தை துணிச்சலான ஒரு போராட்டத்தை ஏன் முன்னணி ஒழுங்கு செய்யக்கூடாது ?

முன்னணி தன்னை ஏனைய கட்சிகளைவிடத் தூய கட்சியாகவும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு அதிகம் விசுவாசமான கட்சியாகவும் காட்டிக் கொள்கிறது. அதைவிட முக்கியமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மெய்யான வாரிசாகவும் அது தன்னைக் காட்டிக்கொள்ள நினைக்கிறது. அந்த அடிப்படையில் அந்த இயக்கத்தின் நினைவு நாள்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது என்று திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது. அண்மையில் அன்னை பூபதியின் நினைவு மண்டபத்தில் கூட, முன்னணிக்கும் கிழக்கைச் சேர்ந்த சிவில் அமைப்புகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. அது ஓர் அருவருப்பான முரண்பாடு. அன்னை பூபதியை நினைவு கூர்வதற்கென்று ஒரு பொதுக் கட்டமைப்பு அங்கே உருவாக்கப்பட்டிருக்கிறது. அதில் குடிமக்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் மதத் தலைவர்களும் அன்னையின் குடும்பத்தவர்களும் இணைக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் முன்னணி அந்தப்பொதுக் கட்டமைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிகிறது. இது திலீபனின் நினைவுத் தூபிக்கு முன் ஏற்பட்ட முரண்பாட்டை நினைவுபடுத்துகின்றது. புலிகள் இயக்கத்தின் நினைவு நாள்களை அனுஷ்டிப்பதற்கு தமக்குத்தான் அதிகம் உரித்தும் தகுதியும் உண்டு என்று முன்னணி கருதுகின்றது. அதன்மூலம் புலிகள் இயக்கத்தின் விசுவாசமான தொடர்ச்சியாகவும் அந்தக்கட்சி தன்னைக் காட்டிக் கொள்ள விளைகின்றது. ஆனால் அதை அவர்கள் தமது செயற்பாட்டில் நிரூபிக்கவேண்டும். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியலைத் தொடர்வது என்பது. அதுவும் மிதவாத அரசியலில் அதைத் தொடர்வது என்பது சாராம்சத்தில் அந்த இயக்கத்தைப்போல அர்ப்பணிப்புகளுக்குத் தயாராக இருப்பது தான். ஆனால் கடந்த 13 ஆண்டுகளாக முன்னணி அப்படிப்பட்ட தியாகங்களைச் செய்திருக்கின்றதா?

பொலிஸாரோடும் படைகளோடும் நெற்றிக்கு நேரே மோதுவதும், துணிச்சலாகக் கதைப்பதும், தள்ளுமுள்ளுப்படுவதும், சில மணித்தியாலங்கள் சிறையில் இருப்பதும், சாகசச் செயல்களே. அவற்றைத் தியாகம் என்று கூற முடியாது. தமிழ் மக்கள் கடந்துவந்த செயற்கரிய தியாகங்களோடு ஒப்பிடுகையில் இவையெல்லாம் தியாகங்களா? திலீபனையும் பூபதியையும் படங்களாக வாகனங்களில் காவித் திரிவது மட்டும் போதாது. அதைவிட ஆழமாக திலீபனைப்போல ,பூபதியைப்போல உண்ணாவிரதம் இருப்பதற்கு முன்னணியில் எத்தனை பேர் தயார்?

கடையடைப்புக்கு அழைப்பு விடுத்த ஏழு கட்சிகள் மட்டுமல்ல, கடையடைப்பைப் பரிகசித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கடந்த 13 ஆண்டுகளாக கொழும்பின் கவனத்தையும் உலகத்தையும் கவனத்தையும் ஈர்க்கும் விதத்தில் போராடத் தவறியிருக்கின்றன. அரசியலில் மற்றவர்களை விமர்சிப்பதால் ஒரு கட்சி தூய்மையானது ஆகிவிடாது. மாறாக மற்றவர்கள் செய்யத் தவறியதைத் தான் செய்யவேண்டும். மற்றவர்களைத் துரோகிகளாக்குவதால் ஒருவர் தியாகியாகிவிட முடியாது . மாறாக தான் செய்யும் தியாகங்களால்தான் ஒருவர் தியாகியாக முடியும்.

தமது மக்கள் மத்தியில் மட்டுமல்ல. அனைத்துலக அரங்கிலும் தமிழ் அரசியலின் அந்தஸ்தை உயர்த்தும் விதத்தில் தமிழ்க்கட்சிகள் உழைத்திருக்கின்றனவா? கடந்த 13 ஆண்டுகளில் தமிழ்க்கட்சிகள் சர்வதேச அளவில் சம்பாதித்த புதிய நட்புகள் எத்தனை? உள்ளூரில் சக தமிழ்க் கட்சிகளோடு கூட்டுக்களைக்கூட வைத்துக் கொள்ளமுடியாத கட்சிகள், எப்படி வெளியரங்கில் உலக சமூகத்தோடு கூட்டுக்களை வைத்துக் கொள்வது? தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அரசியல் அந்தஸ்தை மதிப்பிடுவதற்கு ஆகப்பிந்திய ஓர் உதாரணத்தை இங்கு சுட்டிக்காட்டலாம். சில மாதங்களுக்கு முன் கனடாவுக்கு வெளிக்கிட்ட 303 தமிழர்கள் சிங்கப்பூர் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த பொழுது காப்பாற்றப்பட்டு வியட்நாமில் இடைத்தங்கல் முகாமில் வைக்கப்பட்டார்கள். அவர்களில் ஒரு தொகுதியினர் நாடு திரும்பி விட்டார்கள். அவர்கள் விருப்பத்தோடு நாடு திரும்பவில்லை. இந்த நாட்டில் இருக்கப் பிடிக்காமல்தான் புலம்பெயர முயற்சித்தார்கள். அவ்வாறு திரும்ப விரும்பாதவர்கள் ஐ.நா.வுக்கு மீண்டும் மீண்டும் மேன்முறையீடு செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய மேன்முறையீடுகளும் நிராகரிக்கப்பட்டிருப்பதா கத் தகவல். அவ்வாறு மேன்முறையீடு செய்த சிலர் நாட்டில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் சிலருடைய பரிந்துரைக் கடிதங்களையும் சமர்ப்பித்ததாக அறியமுடிகிறது. ஆனால் வியட்நாமில் தங்க வைக்கப்பட்டிருக்கும் தமிழ் புலம்பெயரிகளை ஐ.நா.ஐ.ஓ.எம் போன்றன சட்டவிரோதக் குடியேறிகளாகத்தான் பார்க்கின்றன. அவர்களை அரசியற் காரணங்களுக்காக குடி பெயரை முற்பட்டவர்கள் என்று பார்க்கவில்லை என்று தெரிகிறது. அதனால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருடைய கடிதங்களை மேற்சொன்ன அனைத்துலக நிறுவனங்கள் பொருட்படுத்தவில்லை. விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்கள் படிப்படியாக நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுகிறார்கள்.

புலம்பெயரிகளின் விடயத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளை உலகப்பொது அமைப்புக்கள் பொருட்படுத்தவில்லை என்று தெரிகிறது. அதாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளுக்கு உலகப்பொது அமைப்புகள் கொடுக்கும் மரியாதை அவ்வளவுதான். அப்படியென்றால் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஐ.நா. போன்ற கட்டமைப்புகளின் மீதும் உலகின் வெளியுறவு கட்டமைப்புகளின் மீதும் எவ்வாறான செல்வாக்கைச் செலுத்த முடியும்?

இதுதொடர்பாக தமிழ்க் கட்சிகளிடம் ஏதாவது வழிவரைபடங்கள் உண்டா? அரசாங்கத்தைப் பகைத்துக் கொண்டு தமிழர்களை அரவணைக்க வேண்டிய தேவை உலகில் எந்த ஓர் அரசுக்காவது உண்டா? அரசுகள் எது பலமோ, எது தேவையோ அதைத்தான் நாடிவரும். எங்கே நீதி இருக்கிறது என்று பார்த்து நாடி வருவதற்கு பூமியொன்றும் தேவராஜ்ஜியம் அல்ல. தமிழ் மக்கள் தமது பேரபலத்தை அதிகப்படுத்த வேண்டும்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணியை பெரும்பாலான தூதரகங்களும் ஐ.நா.வும் ஆர்வத்தோடு கவனித்தன. ஏன், தென்னிலங்கையில் ஏற்பட்ட தன்னெழுச்சிப் போராட்டங்களையும் வெளிநாட்டுத் தூதரகங்கள் ஆர்வத்தோடு கவனித்தன. ஆர்வத்தோடு கையாண்டன என்று கூடச் சொல்லலாம். தமிழ் மக்களுக்கான நீதியைப் பெறப்போவதாகக் கூறிக் கொள்ளும் கட்சிகள் முதலில் தொடர்ச்சியான போராட்டங்களை ஒழுங்கமைக்க வேண்டும்.

கடந்த 13 ஆண்டுகளில் வெற்றி பெற்ற எல்லா மக்கள் போராட்டங்களும் ஒரு கட்சிப் போராட்டங்கள் அல்ல. குடிமக்கள் சமூகங்களோடு இணைந்த பல கட்சிப் போராட்டங்கள்தான். எனவே போராடத் தெரியாத அல்லது போராட முடியாத கட்சிகள் கடையடைப்புக்கு அழைப்புவிடுகின்றன. அதேசமயம் அப்போராட்டம் பிழை என்று கூறும் கட்சியும் கடந்த 13 ஆண்டுகளாக சின்னப் பிள்ளைகளுக்கு கண்ணாடியில் நிலவைக் காட்டும் அரசியலைத்தான் செய்து கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தவறவிடப்பட்ட வாக்களிப்பும் திறக்கப்பட்ட ஆபத்தான கோணமும்!

அ. நிக்ஸன்

இலங்கையின் மொத்தக் கடன்களில் ஆகக் குறைந்தது முப்பத்து ஐந்து பில்லியன் டொலரைத் திருப்பிச் செலுத்த ஒப்புக்கொண்டுள்ளதாக ஜனாதிபதி ரணில், இலங்கை மத்திய வங்கி அதிகாரிகளுடன் கடந்தவாரம் இடம்பெற்ற சந்திப்பில் கூறியிருந்தார்.

இந்த நிலையில் மூன்று பில்லியன் கடன்களைப் பெற ஐ.எம்.எப். எனப்படும் சர்வதேச நாணய நிதியத்துடன் மார்ச் மாதம் கைச்சாத்திட்ட ஒப்பந்தம். நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிமை இலங்கை ஒற்றையாட்சி நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் பெற்றுள்ளது.

இதன் மூலம் சிங்கள - பௌத்த தேசியப் பொது பொறிமுறைக்கும் (General Mechanism) அங்கீகாரம் கிடைத்திருக்கின்றது போல் தெரிகிறது. இலத்திரனியல் முறையில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ஆதரவாக நூற்று இருபது வாக்குகளும் எதிராக இருபத்து ஐந்து வாக்குகளும் பெறப்பட்டன. 95 மேலதிக வாக்குகளினால் ஒப்பந்தம் நிறைவேற்றியுள்ளது.

இங்கே வேடிக்கை என்னவென்றால், இந்த ஒப்பந்தத்துக்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்ட சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, சம்பந்தன் தலைமையிலான தமிழரசுக் கட்சியை மையப்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட்ட தமிழ்த்தேசியக் கட்சிகள், விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்பன வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. ரணிலுக்கு எதிரானவர்களில் மொத்தம் எழுபத்து ஒன்பது உறுப்பினர்கள் வாக்களிப்பில் பங்குபற்றவில்லை. ஆக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, ஜே.வி.பி மற்றும் டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ஸ தலைமையிலான அணி ஆகியன மாத்திரமே எதிர்த்து வாக்களித்துள்ளன. நாடாளுமன்றத்தில் எதிரணியில் சுயாதீனமாகச் செயற்படும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, துமிந்த திஸாநாயக்க, சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, பிரியங்கர ஜயரத்ன ஆகியோர் ஆதரவாக வாக்களித்தனர். ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஏ.எச்.எம் பௌஸியும் ஆதரவாக வாக்களித்தார்.

## இன அழிப்பை நிறுவத் தவறிய தமிழ்க் கட்சிகள்

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசாங்கம் கையொப்பமிட்ட ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி, ஒப்பந்தத்தின்படி மறுசீரமைப்புக்கு உள்ளாகும் அரச நிறுவனங்கள், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மற்றும் ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகள் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்றத்தில் ஏற்கனவே விளக்கம் கோரியிருந்தார். ஆனால் ஒப்பந்தத்துக்கு எதிராக அவர் வாக்களிக்கவில்லை.

ஆகவே சர்வதேச நாண நிதியத்தின் பரிந்துரைகள், இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு அவசியமானது என்பதைச் சஜித் ஏற்றிருக்கிறார் என்றே பொருள் கொள்ளவேண்டும். ஐ.எம்.எப். ஒப்பந்தத்தின் மூலம் அடுத்த நான்கு ஆண்டுகளில் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர் உதவி பெறப்படும். முதல் தவணையில் 330 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கவுள்ளது. ஐ.எம்.எப். கடன் திட்டத்தைக் காண்பித்து உலக வங்கி மற்றும் ஏனைய கடன் வழங்குபவர்களிடமிருந்து மேலும் ஏழு பில்லியன் டொலர் துரித கடன் உதவியை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

வடக்கு - கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள், புத்தர் சிலை வைத்தல் ,பௌத்த விகாரைகள் கட்டுதல் போன்ற செயற்பாடுகளுக்காகச் சர்வதேச நாணய நிதியம் நிதி வழங்குவதாகக் குற்றம் சுமத்தியிருந்த தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த்தேசியக் கட்சிகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் தவிர்த்ததன் மூலம், தமது இரட்டைவேடத்தைப் பகிரங்கப்படுத்தியுள்ளன. எதிராக வாக்களித்ததன் மூலம் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தமிழர் தாயகத்தில் 2009 க்குப் பின்னரும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் இன அழிப்புச் செயற்பாடுகளுக்கு ஐ.எம்.எப். ஆதரவு வழங்குகின்றது என்ற கருத்தைக் குறிப்பிட்ட அளவேனும் பதிவு செய்திருக்கிறது.

பொருளாதார நெருக்கடிக்கு எதிரான போராட்டங்களை அடக்க ரணில் அரசாங்கம் கையாண்ட ஆபத்தான முறைகள் பற்றி சிங்களக் கட்சிகள் கொழும்பில் ஐ.எம்.எப். பிரதிநிதிகளுக்கு நேரிலும் எழுத்து மூலமாகவும் முறைப்பாடுகள் செய்திருந்தன. ஊழல்மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் மற்றும் முறைகேடான அரசியல் - பொருளாதார அணுகுமுறைகளினால் சர்வதேச நிதி விரையமாக்கப்படுகின்றது எனவும் சிங்களக் கட்சிகள் கொழும்பில் பகிரங்கப்படுத்தியிருந்தன.

கண்ணீர்ப்புகைக் குண்டுகளால் ஆர்ப்பாட்டத்தில் பலர் உயிரிழந்தனர். இதற்கு இரசாயன விஷக் கலவை காரணமா அல்லது காலாவதியான கண்ணீர்ப்புகைக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டமைதான் காரணமா என்று சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேரடியாகக் கேள்வி தொடுத்திருந்தார். குறிப்பாக 2022 மே ஒன்பதாம் திகதியன்று அலரி மாளிகை அருகிலும், 2022 ஜுலை பதின்மூன்றாம் திகதியன்று காலி வீதியில் உள்ள பிரதமர் அலுவலகம் அருகிலும் 2023 பெப்ரவரி இருபத்து ஆறாம் திகதியன்று கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்துக்கு அருகிலும் மற்றும், 2023 மார்ச் ஏழாம் திகதியன்று கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு அருகிலும் நடந்த போராட்டங்களைக் கலைக்கப் பயன்படுத்தப்பட்ட'சி.எஸ். ஷெல்ஸ் காஸ்' (CS Shells) மற்றும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளின் உற்பத்தி திகதிகள் மற்றும் காலாவதித் திகதிகள் தொடர்பாக சஜித் விளக்கம் கோரியிருந்தார்.

குறித்த போராட்டங்களில் பயன்படுத்தப்பட்ட 'சி.எஸ். ஷெல்ஸ் காஸ்', கண்ணீர்ப் புகைக்குண்டுகளின் தரத்தை உறுதி செய்ய முறையான பரிசோதனை நடத்தப்பட்டதா என்றும் பரிசோதனை செய்து அந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் சஜித் கோரியிருந்தார். 1500 'சி.எஸ். ஷெல்ஸ் காஸ்' மற்றும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை கொள்வனவு செய்ய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியதா, இதற்காக மதிப்பிடப்பட்ட தொகை எவ்வளவு என்றும் சஜித் நாடாளுமன்றத்தில் கேள்வி தொடுத்ததுடன், இது பற்றி ஐ.எம்.எப். பிரதிநிதிகளுக்கும் அறிவித்திருந்தார். கொழும்பில் உள்ள தூதரகங்களுக்கும் சஜித் பகிரங்கப்படுத்தியிருந்தார்.

இப்போது பிரதான எதிர்க்கட்சியாகவும் , வருங்காலத்தில் ஆளும் கட்சியாகவும் வரக்கூடிய அந்தஸ்தில் இருந்து கொண்டு சஜித் பிரேமதாஸ இத்தனை விளக்கங்களையும் குறிப்பாக ரணில் அரசாங்கத்தின் மனித உரிமை மீறல் செயற்பாடுகளைக் காண்பித்திருக்கிறார். ஆனாலும் ஐ.எம்.எப்.பின் பரிந்துரைகள் குறிப்பாக ஒப்பந்தம் மூலம் கிடைக்கவுள்ள கடன்கள் இலங்கைத் தீவுக்குரியது. அது ரணில் அரசாங்கத்துக்குச் சொந்தமானதல்ல என்பது சஜித்துக்கு நன்கு தெரியும். ஏன், ரணிலை விமர்சிக்கும் ஜே.வி.பி, டலஸ் அழகப்பெரும தலைமையிலான அணி, விமல் வீரவன்ஸ உள்ளிட்ட அனைத்துச் சிங்கள உறுப்பினர்களுக்கும் அந்தப் புரிதல் உண்டு.

அதன் காரணமாக எதிர்த்துவிட்டு பின்னர் ஆதரவாக வாக்களிக்கின்றனர் அல்லது வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் அவர்கள் விலகிச் செல்கின்றனர். சீனாவுக்கு எதிராக தமிழரசுக் கட்சி உறுப்பினர் சாணக்கியன் நாடாளுமன்றத்தில் கருத்திட்ட போது, சஜித் அணி உறுப்பினரான ஹர்ஷ டி சில்வா, சாணக்கியன் மீது பாய்ந்தார்.

அமெரிக்கா, சீனா போன்ற வல்லரசு நாடுகளுடன் இலங்கை அரசு ஒத்துழைத்துச் செயற்படவேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டியிருந்தார். அதாவது தமிழ்க் கட்சிகள் போன்று சிங்களக் கட்சிகள் செயற்படமுடியாது என்பதே ஹர்ஷ டி சில்வா கூறியதன் பொருள். அவருடைய ஆவேசம் அந்தத் தொனியை வெளிப்படுத்தியிருந்தது. ஆகவே பிரதான எதிர்க் கட்சியுடன் இணைந்து அரசாங்கத்தை எதிர்த்து அரசியலில் ஈடுபட்டு மண் கவ்விக் கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சியும் மற்றும் தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கும் கிடைத்த செய்தி என்னவென்றால், பிரதான சிங்களக் கட்சிகள் தமது அரசியலுக்காகத்தான் அரசாங்கத்தை எதிர்க்கிறார்களே தவிர, சர்வதேச நாணய நிதியம் போன்ற நிதி நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நாடுகளிடம் இருந்து பெறப்படும் அத்தனை நிதிகளையும் இலங்கைத் தீவுக்கான உதவித் திட்டமாகவே கருதுகின்றன.

அதாவது சிங்களத் தேசியத்தைக் கட்டியெழுப்புதல் என்ற பொதுவான இலக்கில் அவர்கள் தெளிவாகவுள்ளனர். எதிர்ப்பது பின்னர் சேர்ந்து பயணிப்பது அல்லது எதிர்த்து விட்டுப் பின்னர் அமைதியாக இருப்பது என்பது அவர்களுடைய உள்ளக ஜனநாயகக் கட்சி அரசியல். அது நியாயமான அரசியலும் கூட. ஜே.வி.பி. கூட நாளைக்கு ஆளும் கட்சியாக வந்துவிட்டால் அல்லது ஆளும் கட்சிக்கு ஆதரவு கொடுக்கும் சூழல் ஏற்பட்டால், சஜித் மேற்கொள்ளும் அரசியலையே அவர்களும் செய்வர் என்பது கண்கூடு.

ஆனால் அப்படியொரு கட்சி அரசியலைத் தமிழ்த்தேசியக் கட்சிகள் முன்னெடுக்கக் கூடிய சூழல் இல்லை. தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் அதாவது ஈழத்தமிழர்களின் தனித்த இறைமை என்று வாதிட்டு நூல் ஒன்றை எழுதிய திருச்செல்வம் 1965 இல், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பொறுப்பை ஏற்றிருந்தார்.

பின்னர் விரக்தியடைந்து அமைச்சுப் பொறுப்பில் இருந்து விலகி வெளியே வந்தார். சிங்களக் கட்சிகளை நம்பமுடியாது என்றார். 2015 இல் மைத்திரி - ரணில் அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுத்துவிட்டுப் பின்னர் சுமந்திரன் என்ன சொன்னார்? தற்போது ரணில் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் நிலையில் சுமந்திரன் கூறுவதென்ன? சட்ட மறுப்புப் போராட்டத்தை நடத்துவோம் என்று மார்தட்டும் அளவுக்கு சுமந்திரனைத் தூண்டிய காரண - காரியம் புரிகின்றதல்லவா?

ஆகவே பட்டறிவு இருந்தும் தமிழரசுக் கட்சியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக இணைந்து செயற்பட்டிருந்த தமிழ்த்தேசியக் கட்சிகளும் சிங்கள எதிர்க்கட்சிகளின் அரசியலுக்குள் கரைந்துபோக வேண்டிய அவசியமில்லையே? ஐ.எம்.எப். ஒப்பந்தத்துக்கு எதிராக வாக்களித்திருக்க வேண்டுமல்லவா?

போராட்டங்களில் பயன்படுத்திய கண்ணீர்ப்புகைக் குண்டுகள், ஷெல் காஸ் போன்றவை குறித்துச் சஜித் கேள்வி எழுப்பியது போன்று வடக்கு - கிழக்குக் குடியேற்றங்கள், காணி அபகரிப்புகள், புத்தர் சிலை வைத்தல் மற்றும் தமிழர் பிரதேசங்களில் அதிகரித்த இராணுவ முகாம்கள் போன்ற இன அழிப்புச் செயற்பாடுகளை ஆதாரங்களுடன் பட்டியலிட்டிருக்க வேண்டும் அல்லவா? அதற்குரிய அரச செலவுகள் பற்றி ஐ.எம்.எப். பிரதிநிதிகளுக்குச் சொல்லியிருக்க வேண்டுமல்லவா?

தேர்தலில் வெற்றி பெறும் வியூகங்களை மாத்திரம் வகுத்து, இலங்கை ஒற்றையாட்சி நாடாளுமன்றத்துக்குள் ஆசனங்களின் எண்ணிக்கையை அதிகரித்து ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலையைப் பெற்றுவிட முடியாது என்பது முடிந்த முடிவு. புவிசார் அரசியல் பொருளாதார போட்டிகளின் சூழலில் தேர்தல் அரசியல் மூலம் வடக்கு - கிழக்குத் தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்பதை நிறுவவேண்டிய தேவை உண்டு. அதற்காகக் கட்சி அரசியலிலும் ஈடுபட வேண்டும்.

ஆனால் கட்சி முரண்பாடுகளை வளர்த்தும், தனிநபர் செல்வாக்குகளை உயர்த்த முற்பட்டுக் கொண்டும் தமிழ்த்தேசிய விடுதலையை அடைய முடியாது. சாதி - சமய உட்பூசல்களுக்கு இடமளித்துக் கொண்டும் அல்லது கண்டும் காணாதது போன்று செயற்படுவதன் ஊடாகவும் தமிழ்த்தேசிய அரசியல் விடுதலையைப் பெறவே முடியாது.

வடக்கு - கிழக்குத் தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்பதை நிறுவக்கூடிய தர்க்க விளக்கங்கள். ஆதாரங்கள் இருந்தும், அந்தத் தமிழ்த்தேசிய அரசியல் சரியான புரிதலோடு முன்னெடுக்கப்படவில்லை. ஐ.எம்.எப். ஒப்பந்தத்துக்கு எதிராக வாக்களிக்காமல் தவிர்த்ததன் மூலம், அந்தத் தவறு புதியதொரு ஆபத்தான கோணத்தில் (Dangerous Angle) வெளிப்பட்டிருக்கிறது.

தமிழ்த்தேசியக் கட்சிகள் ஒவ்வொன்றும் தமக்குள் விட்டுக் கொடுத்துச் செயற்படும் ஜனநாயகச் சூழலை முதலில் வளர்க்கவேண்டும். தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்குத்தான் இந்தப் பொறுப்பு அதிகமாகவுள்ளது. ஈழத்தமிழர் விவகாரத்தில் சிங்களக் கட்சிகள் பொதுப்பொறிமுறை ஒன்றை வகுத்துச் செயற்படுவது போன்று ஒருமித்த குரலுடன் கூடிய அணுகுமுறையைக் கையாள வேண்டிய காலமிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்புரம் சி.கதிர்காமநாதன்



# 'தண்ணியடிக்காத'

சஞ்சீவி சிறுகதை

எனது நண்பன் சொன்னது எனக்கு வருத்தமளித்தது. எனக்கும் அவனுக்கும் நீண்டகால உறவு . எமது வீட்டு சுகதுக்கங்களில் அவனது குடும்பம் கலந்து துணையாக நிற்கும் நண்பன் சொன்ன விடயம் அவனது மகளைப் பற்றியது. படித்து நல்ல வேலையில் உள்ளார். கலியாணம் கட்ட வேண்டிய வயதையும் அடைந்தாகிவிட்டது. நண்பனும் சாதகம் பார்த்துக்கொண்டு தான் இருந்தான். பொருத்தங்கள் வந்தாலும் மகள் போட்ட கறாரான விஷயம் அவருக்கு பிரச்சினையை உண்டுபண்ணியது.

"அப்பா மாப்பிள்ளையா வாறவர் கட்டையோ, உயரமோ, கலரோ, கலரில்லையோ. அரசாங்க வேலையோ, அரச வேலையில்லையோ பிரச்சினையில்லை. தண்ணியடிக்காத, கெட்டபழக்கமில்லாத ஆளைப் பாருங்கோ. பிறகு தெரியாமல் கட்டிப்போட்டு பிரச்சினைப்பட்டுக் கொண்டு நிக்கேலாது"

அவள் சொல்லிப் போட்டு தொலைக்காட்சி கதாநாயகி மாதிரி தோளில் 'ஹாண்ட் பாக்கை' மாட்டிக்கொண்டு போய்விடுவாள். இதுதான் நண்பன் சொன்ன கதை.

"என்னடா செய்யிறது. நான் பார்க்கிற காலத்தில தண்ணியடிச்சு , சிகரட்டும் பத்தினான். பிறகு கலியாணம் முடிச்சு பொறுப்பு வந்தவுடன எல்லாம் கைவிட்டாச்சு. உன்னை மாதிரி படிக்கிற காலம் தொடங்கி தண்ணியடிக்காத ஆக்கள் சரியான குறைவெல்லோ"

"சரி ,அதைவிடு மச்சான். இப்ப மகளுக்கு என்ன செய்யிறது?'

"சம்பந்தம் வந்தாலும் பெடியன் நல்ல வேலையில் இருந்தாலும் கடைசியில விசாரிச்சுக் கொண்டு போனால் அவருக்குத் தண்ணியடிக்கிற பழக்கம் இருக்குதெண்டு கதை வருதுகு. பிறகென்ன செய்யிறது?"

"மச்சான்... இப்ப இந்தப் பழக்கமில்லாம் பெடியன் எடுக்கிறது இப்ப கஷ்ரமான விசயம்.... உப்பிடி நுணுகிப் பாத்தா கலியாணம் கட்டிமுடிக்க ஏலாது. மகளுக்கு விளங்கப்படுத்திப் பாரன்"



"எனக்கும் மனுசிக்கும் மகள் வேலை முடிஞ்சு வந்தா உது பற்றி வகுப்பெடுக்கிறதுதான் வேலை ஆம்பிளயெண்டால் உப்பிடித்தான் இருப்பின மெண்டு சொன்னா, 'அப்பா... எங்கட ஓபிசில கனபேர் கலியாணம் கட்டி, புருஷனின்ரை தண்ணப் பழக்காதல பிரச்சினைப் பட்டுக்கொண்டு பிரிஞ்சுபோய் இருக்கினம். கலியாணம் முடிஞ்ச பிறகு தண்ணியடிக்கிறதை விடுவமெண்டு சொல்லிப்போட்டு , கடைசி வரைக்கும் அதை விடமாட்டினம். மனுசிமார் படுறபாடு.... அப்பா... எனக்கும் வாற புருஷன் உப்பிடி தண்ணியடிக்கிற ஆளா இருந்தால் என்ன செய்யிறது? எண்டு பாய்ஞ்சு கொண்டு வாறாள் மச்சான் . நான் என்ன செய்ய...?"

> "வேலை பிரச்சினை இல்லை. ஆள் தண்ணியடிக்காத பெடியனா இருக்க வேணும். அதுதான் முக்கியம். | 'தண்ணியடிக்காத...' என்ற சொல்லைக் கேட்டவுடன் அவர்கள் ஒரு மாதிரியாக என்னைப் பார்த்தார்கள். "இப்ப உந்த விசயம் கஷ்டமண்ணை.

"மகளுக்கும் வயதெல்லே போகப் போகுது? இந்த வருஷமானவது செய்து வைக்க வேணும் முப்பது முடியப் போகுது"

எனக்கும் ரெண்டு பிள்ளைகள். மூத்தவளுக்கு இருபத்தெட்டு முடியப்போகுது. அடுத்தவளுக்கு வயது இருக்கு. ...நாங்கள் பேசாமல் இருந்துவிட்டோம். உறவினர்கள்தான் இதுபற்றி எங்களுக்கு ஞாபகப்படுத்திக் கொண்டு இருந்தார்கள்.

"என்ன மகளை வைச்சுக்கொண்டு இருக்கிறியள். கலியாணங்கள் ஒண்டும் பேசேல்லையோ?"

எனது நண்பனின் நிலைமையைப் பார்க்க பயமாக இருந்தது.

"எனது மகளும் கலியாணம் பேசத் தொடங்க என்ன 'கொண்டிசன்' போடு வாளோ?"

நண்பனின் மகளின் கலியாண விசயத்தோடு இப்ப நானும் மனுசியும் யோசிக்கத் தொடங்கி விட்டோம்.

"ஆம்பிள தண்ணியடிக்கிறது எந்தப் பெண்ணுக்கு பிடிக்கும்?

நண்பன் இப்போது அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொண்டான்.

"மச்சான் நான் சொன்ன விசயத்தை மறந்து போகாத... தண்ணியடிக்காத மாப்பிளை ஒண்டு பார் மச்சான்..."

றோட்டுக்குப் போய் இளம் பெடியளைப் பார்த்தால் குழப்பமாக இருக்கு. ஆர் தண்ணியடிக்காத ஆளாய் இருப்பினம்? ஊரில் என்ன கொண்டாட்டங்கள் நடந்தாலும் கடைசியில் தண்ணிப் பாவனையோடுதானே நிகழ்வு முடிவுக்கு வருகுது. இரவில் படுத்த கையோடு ஒழுங்கையில் விரைந்து செல்லும் வாகனங்களில் கத்தி கூப்பாடு போட்டுப் போகும் இளம் சந்ததிகள் எதனை எங்களுக்கு ஞாபகப்படுத்துகிறார்கள்?

"டேய் மச்சான் மகள் பிறந்திருக்கிறான். பார்ட்டி இல்லையோ?"

"என்ன சம்பளம் கூட்டிப்போட்டங்கள் . எங்களும் கவனிப்பு இருக்கல்லே?"

"வெளியால போறது சரிவந்திட்டு போல. அப்ப பார்ட்டி..?"

"என்ன கலியாணம் பொருத்திப் போச்செண்டு கேள்விப்பட்டன். ப்ரெண்ட்ஸ் எல்லாம் செற் ஆவமோ?"

" தண்ணி பார்ட்டி இருந்தா சாப்பிட வருவம். இல்லாட்டி வாறதில்ல பிரயோசனமில்லை..."

தண்ணி.... தண்ணி.... பார்ட்டி... பார்ட்டி...!!

நானும் நண்பனின் மகளின் குறிப்பை தொல்புரத்து நண்பர்களிடம் கொடுத்து மாப்பிள்ளை பார்க்கச் சொன்னேன்.

"வேலை பிரச்சினை இல்லை. ஆள் தண்ணியடிக்காத பெடியனா இருக்க வேணும். அதுதான் முக்கியம். | 'தண்ணியடிக்காத...' என்ற சொல்லைக் கேட்டவுடன் அவர்கள் ஒரு மாதிரியாக என்னைப் பார்த்தார்கள்.

"இப்ப உந்த விசயம் கஷ்டமண்ணை. வேலையில பிரச்சினை கொடுக்கிற ஆக்களை அதிகாரிகள் தண்ணியில்லாத காட்டுக்கு அனுப்பி தண்டிக்கிறவையெண்டு சொல்லுறவை. அவை அங்கபோய் சேர்ந்து தண்ணியடிச்சு இப்ப சந்தோசமா இருக்கிற காலமிது" நாமும்



மனதைத் தளரவிடாமல் தேடும் படலத்தைத் தொடர்ந்தோம். புரோக்கரிடமிருந்து தகவல் வந்தது.

"ஐயா பெடியன் அரச வேலையில்லை. நீங்க கேட்ட மாதிரி இருக்கு... பார்ப்பமே?"

"கடவுளே பொருந்தினால் எவ்வளவு நல்லா இருக்கும்."

நண்பனிடம் தகவலைச் சொன்னேன்.

"டேய் கெதியாய் பாப்பம். விடக்கூடாது. "

பெடியனின் படமும் கிடைத்தது. பாக்கியராஜ் மாதிரி இருந்தார்.

போய்ப் பார்த்தோம். பேசத் தொடங்கி கடைசியில் பெடியனின் தாயார் அதிர்ச்சியான செய்தியைச் சொன்னார்.

"நாங்கள் சுத்த சைவம்' சாமிக்கு விளக்குவைச்சு கும்பிட்டுச் சாப்பிடுறனாங்கள். அசைவம் சாப்பிடமாட்டம். தம்பியும் சுத்த சைவம். அதைத் தொடவேமாட்டான்"

"என்ன சைவமோ?"

"எங்களுக்கு இது தெரியாது"

"புரோக்கர் சொல்லாமல் விட்டிட்டான்"

"என்ர நண்பன்ரை மகளுக்கு மீன் தலையில்லாமல் சோறு உள்ள இறங்காதே.."

இந்த நவீன காலத்தில எல்லா வசதி வாய்ப்புகள் இருந்தும் ஒரே ஒரு மீன் துண்டால, அசைவத்தால ஒரு பெண்ணின்ரை வாழ்க்கை அநியாயமாக் கையை விட்டு போகுதே?"

ஐயோ இப்ப மனதுக்க புலம்பி என்ன செய்வது? அத்தோடு அந்தச் சம்பந்தம் குழம்பி விட்டது.

நாங்கள் மனதைத் தளரவிடவில்லை. ஊரில் நடந்த கோயில் திருவிழாக்களில் இதுபற்றி விசாரித்தேன். அதே பல்லவியைச் சொன்னேன். திருவிழாக்களில் தண்ணீர்ப் பந்தல்களில் அதிக நேரத்தை செலவழித்தேன்.

"ஏனப்பா கும்பிடாமல் இங்க வந்து என்ன செய்யிறியள்?"

"சில வேளை தண்ணியடிக்காத மாப்பிளை ஆரும் இந்தப் பக்கம் வந்தாலும் வரலாமெல்லே?"

"விசர்க்கதை கதையாம கும்பிடவாங்கோ"

ஒருநாள் தகவல் வந்தது.

எல்லாமே எங்களுக்கு ஏத்தமாதிரி இருந்தது.

"மச்சான் உதுதன்னும் பொருந்திப் போடவேணும். யாரிட்டையும் இந்த சம்பந்தம் பேசி முடிக்கும் வரை சொல்லக்கூடாது" நண்பன் என்னிடம் சத்தியம் வாங்கினான். நானும் சத்தியம் செய்து போட்டன். (உங்களுக்கும் பெடியன் பற்றிய விடயத்தை சொல்ல மாட்டான்)

பெடியனை நேரில் பார்க்க ஆசைப்பட்டோம். அதுவும் நாங்கள் பெடியனை சொல்லிக்கொள்ளாமல் பார்க்க நினைத்தோம்.

நல்ல நாள் பார்த்து இருவரும் மோட்டார் சைக்கிளில் போய் அவர் அலுவலகத்தை அடைந்தோம். நாங்கள் போன நேரததைக் கண்டு காவலுக்கு நின்றவர் ஓடிவந்து எங்களை வழிமறித்தார்.

"என்ன அவசரமாப் போறியள்? ஆரைப் பார்க்கவேணும்?"

பெடியனின் பேரைச் சொன்னேன்.

"அவர் நிக்கிறாரோ?"

"அவர் நிக்கிற ஆளே? தண்ணியடிக்கப் போயிருப்பார்....."

"எ.....ன்....ன? தண்ணியடிக்கவோ"

நண்பனுக்கும் எனக்கும் தலை சுற்றியது.

"தண்ணியடிக்கவோ?"

"பாக்கப் போறியளோ?"

"இந்தக் கோலத்தில பெடியனை எப்படிப் பார்க்கிறது? அவரை குழப்பாதையுங்கோ. நாங்கள் பிறகு வாறம்"

இருவரும் தளர்ச்சியுடன் மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு உருட்டியபடி நடந்தோம்.

"கடவுளே ஒரு மாப்பிள்ளை கிடைக்கமாட்டானா?"

வெளியே வர பின்னால் ஒரு குரல்

நாங்கள் அதிர்ச்சியுடன் திரும்பினோம்.

"என்னைப் பாக்க வந்தியளாம். பக்கத்து ஊரில நல்ல தண்ணி இல்லை. அவைக்கு இஞ்ச உள்ள கிணத்தில இருந்து வாற தண்ணி எடுத்து குடுக்க வேணும். அதான் பவுஸரில தண்ணியடிக்க போயிட்டன். இப்படி தண்ணியடிச்சாச்சு. சரி... சொல்லுங்கோ ஏன் என்னைத் தேடி வந்தனீங்கள்?"

என்ன சொல்வது?

கடைசியா மாப்பிள்ளை கிடைச்சிட்டார்.

(யாவும் சிந்தனையே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


○ இயல்வாணன்


குப்பிழான் ஐ. சண்முகன் என்று எழுத்துலகில் அறியப்பட்ட ஐயாத்துரை சண்முகலிங்கம் கடந்த 24 ஆம் திகதி தனது 77வது வயதில் இயற்கை எய்தினார். சிறுகதை எழுத்தாளராக, கவிஞராக, சமயப் பேச்சாளராக, விமர்சகராக எல்லாவற்றுக்கும் மேலாக சிறந்த மனிதராகத் திகழ்ந்தவர் சண்முகன்.

குப்பிழான் என்ற விவசாயக் கிராமத்தில் 1946ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாந் திகதி பிறந்த இவர் குப்பிழான் விக்னேஸ்வர மகா வித்தியாலயம், புன்னாலைக்கட்டுவன் மெதடிஸ்த மிசன் ஆங்கிலப் பாடசாலை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகியவற்றில் படித்து, கொழும்பில் ஒரு வருடமும் பேராதனையில் இரு வருடமுமாகக் கற்று இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியாக வெளியேறினார். 1968 இல் பரீட்சைத் திணைக்களத்தில் எழுதுவினைஞராகப் பணியை ஆரம்பித்த இவர் கல்வித் திணைக்களத்திலும் பணியாற்றினார். 1984 முதல் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகச் சேவையாற்றி ஓய்வு பெற்றார்

1965 இல் யூனியன் கல்லூரியில் உயர்தரத்தில் படிக்கும் காலத்தில் அங்கு வெளியிடப்பட்ட கையெழுத்துச் சஞ்சிகையில் இவரெழுதிய தமிழில் திறனாய்வு என்ற கட்டுரையே இவரது கன்னி முயற்சியாகும். 1966 இல் இவரெழுதிய "பசி"சிறுகதை ராதா சஞ்சிகையில் பிரசுரமாகி இவரை எழுத்துலகுக்கு இனங்காட்டியது. அலை, மல்லிகை, சிரித்திரன், ஈழநாடு, வீரகேசரி, சுதந்திரன், இளம்பிறை, அஞ்சலி, மங்கை, கற்பகம், எழில், நெய்தல், கலங்கரை, திசை, வாணி, ஏகலைவன் முதலான பத்திரிகைகள், சஞ்சிகைகளில் இவரது படைப்புகள் வெளிவந்தன. குப்பிழான் ஐ.சண்முகன் என்ற பிரதான புனைபெயரில் சிறுகதைகள் எழுதிய இவர் கற்பகன், பண்பாடகன், கற்கரை கற்பவன் முதலான புனைபெயர்களிலும் எழுதியுள்ளார். இவரது 11 சிறுகதைகள் கொண்ட கோடுகளும் கோலங்களும் தொகுப்பு 1976இல் வெளிவந்ததுடன் சாகித்திய மண்டலப் பரிசினையும்





குப்பிழான் ஐ.சண்முகன்



பெற்றுக் கொண்டது. 21 கதைகள் கொண்ட சாதாரணங்களும் அசாதாரணங்களும்(1983), 12 கதைகள் கொண்ட உதிரிகளும்(2006), ஒரு பாதையின் கதை(2014), 10 கதைகள் அடங்கிய ஒரு தோட்டத்தின் கதை(2018) ஆகிய சிறுகதைத் தொகுதிகளும் வெளிவந்துள்ளன. இவர் எழுதிய கவிதைகளின் தொகுதி பிரபஞ்ச சுருதி (2015) என்ற பெயரில் வெளியானது. பத்தி எழுத்துகளின் தொகுதி அறிமுகங்கள், விமர்சனங்கள், குறிப்புகள்(2003) என்ற தலைப்பில் வெளியானது. நூல் அறிமுகங்கள், நூல் விமர்சனங்கள், திரைப்பட அறிமுகங்கள் மற்றும் விமர்சனங்கள் இந்தத்தொகுதியினுள் இடம்பெற்றுள்ளன. குப்பிழான் ஐ.சண்முகத்தினுடைய சிறுகதைகள் மென்னுணர்வுத் தளத்தில் கட்டவிழ்பவை. நேர்த்தியான பாத்திர வார்ப்பு, பாத்திரங்கள் இயல்பாக இயங்குவதனூடாக கதையை நகர்த்திச் செல்லும் பாங்கு, தங்குதடையற்ற எளிமையான மொழிநடை, பல்வேறு உத்திகளைக் கையாண்டு கதைகளை நகர்த்துதல் என்பன இவரது தனித்த அடையாளமெனலாம்.

அகவுணர்வுச் சிக்கல்களை, அக முரண்களை விபரிப்பனவாக இவரது கதைகள் உள்ளன. சாமானிய மனிதர்களின் விருப்பு வெறுப்புகளை, மனநிலைகளை, நடத்தைக் கோலங்களை, உணர்ச்சி வெளிப்பாட்டினை ஒரு ஒளிப்பதிவாளனின் லாவகத்தோடு குப்பிழான் ஐ.சண்முகன் பதிவு செய்துள்ளார். புறநிலை நின்று பார்க்கும் வகையிலும் கதைகளை எழுதியுள்ளார். கதைகளுக்கூடாக மனிதாயப் பண்புகளை பாத்திரங்கள், அவற்றின் உரையாடல் மூலமாக இவரது கதைகளில் நாம் தரிசிக்கலாம். அவரிடம் உள்ள ஆன்மீக உணர்வையும் பல கதைகளிலும், கவிதைகளிலும் தொற்ற வைத்துள்ளார்.

அலை சஞ்சிகையின் முதல் 12 இதழ்களிலும் ஆசிரியர் குழுவில் ஒருவராகப் பணியாற்றினார். ஜீவநதி சஞ்சிகையின் ஆரம்ப இதழ்களில் ஆலோசகராக இவரது பெயர் இடம்பெற்றிருந்தது. புதிய தரிசனம் சஞ்சிகையின் ஆலோசகராகவும் இவர் செயற்பட்டுள்ளார். யாழ். இலக்கிய நண்பர்கள் கழகம், கொழும்பு கலை இலக்கிய நண்பர்கள் கழகம், இலங்கை வானொலி இளைஞர் மன்றம் ஆகிய அமைப்புகளிலும் இவர் இணைந்து செயற்பட்டுள்ளார்.

எழுத்துலகுக்கு அப்பால் ஒரு சமயப் பேச்சாளராகவும் இவர் விளங்கினார். சமயக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இசையார்வம் மிக்கவராகவும் இளையவர்களைத் தட்டிக் கொடுத்து வழிப்படுத்தும் நல்லாசிரியராகவும் விளங்கியுள்ளார். இவரது எழுத்துலக சேவைகளுக்காகப் பல்வேறு பாராட்டுக்களையும் விருதுகளையும் பெற்றுள்ளார். சாகித்திய விருது, வடமாகாண ஆளுநர் விருது, கலாபூஷணம் விருது, பேராதனைப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட சங்கச் சான்றோன் விருது, அவை இலக்கிய விருது, கரவெட்டி பிரதேசசெயலக விருது, சந்நிதியான் ஆச்சிரமம் வழங்கிய ஞானச் சுடர் விருது, சொந்த ஊரான குப்பிழானில் பெற்ற இலக்கிய ஞானச்சுடர், சமூகதிலகம் விருதுகள் எனப் பல அவரது எழுத்தூழியம் மற்றும் சமய சமூகப் பணிகளுக்காக வழங்கப்பட்டுள்ளன. அவரது பவளவிழாவையொட்டி ஜீவநதி சஞ்சிகை சிறப்பு மலர் வெளியிட்டு அவரைக் கௌரவித்துள்ளது. கலை இலக்கிய சேவையாற்றி, மனிதப் பண்புகளுடன் வாழ்ந்த குப்பிழான் ஐ.சண்முகன் அவரது படைப்புகள் மூலமாகவும், நண்பர்களின் உள்ளத்திலும் என்றும் வாழ்வார்.

# சேர்ந்திசைத்த கலைஞன்

# எம்.பி.சீனிவாஸ்



○ கோகுலராகவன்

வயது ஏற ஏற ஞாபக சக்தி குறைவதாக முன்னர் ஒரு பதிவில் சொன்னேன். ஆனால் இளவயது ஞாபகங்கள் இன்னும் மறையவில்லை.

அப்போது என் வயது இன்னும் மிகக் குறையவே இருந்தது. அப்பாவுடன் தலை மயிர் வெட்ட சலூனுக்குச் சைக்கிள் முன் 'பாரில்' இருந்து போன போது அந்தச் சலூனில் "ஒரு சின்னப்பறவை அன்னையைத் தேடி" என்ற பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது. எனக்கு அப்போது திரைப்படங்கள் பற்றி தெரியாத வயதாகவே இருக்கவேண்டும். கண்ணாடி ஊடாக பறவை ஒன்று பறப்பதை நிஜத்தில் கண்டபோது அந்தப் பறவை தான் தாயைத்தேடி பறக்கும் பறவை எனவும், அதற்கான பாடலும் இதுதான் எனவும் நினைத்த ஞாபகம்.

அந்தப் பாடல் எனக்கு இதயம் தொட்ட பாடல் "மதனமாளிகை" திரைப்படத்தில் நடிகர் சிவகுமாருக்கான பாடல். இலங்கை வானொலியில் ஆயிரம் தடவை கேட்டிருப்பேன். அந்தப் பாடலுக்கான இசையை வழங்கிய எம்.பி.சீனிவாஸ் பற்றி மெல்ல மெல்ல அறியும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் இசைப்பாங்கு வேறு எந்த இசையமைப்பாளருக்கும் கிடைக்காத மகத்துவமானது.

"தேன் கடிக்கும் மெல்லிழதை நான் கடித்தால் ஆகாதோ?"

அவர் இசையமைத்த "சித்திரப்பூ சேலை" என்ற பாடலின் ஓர் இடை வரி இது. "புதுச் செருப்பு கடிக்கும்" படத்தில் எழுத்தாளர் ஜெயகாந்தன் எழுதிய பாடல்.

எஸ்.பி.பி .யின் தவளும் குரலில் எத்தனை தரம் கேட்டாலும் சலிக்காத பாடல்.பாடலில் இசை வடிவம் வித்தியாசமானது.

மெல்ல இறங்கி, மெல்ல ஏறி,
தாழித்திருப்பார்கள் இருவரும்.

அவரை யாராலும் பிரதி பண்ண முடியாது. அவர் யாரையும் பிரதி பண்ணியதும் கிடையாது.அதுவே அவரது இசை மேன்மை. நியாஸ் கோஷ் இயக்கிய "பாதை தெரியுது பார்" என்றொரு படம் .எம் .பி .சீனிவாஸ் தான் இசையமைத்தார்.இதுவே அவரது முதல்படம் . மிக அருமையான பாடல்கள் உருவாக்கப்பட்டன.

"தென்னாங்கீற்று ஊஞ்சலிலே
தென்றல் ஆடிடும் சோலையிலே
சிட்டுக்குருவி பாடுது"

பி.வி.சீனிவாஸ் பெண்மை கலந்த குரல் மற்றும் ஜானகி. பாடல் நவீன வடிவத்தைக் கொண்டதாக இப்போதும் ஒலிக்கிறது. மிகவும் அற்புதமான பாடலாக அப்போதும் ஒலித்தது. யாருமே உருவாக்காத முறையில் எம்.பி.சீனிவாஸ் அதை உருவாக்கினார்.

இதே படத்தில் இன்னுமொரு பாடல்,

"சின்னச் சின்ன மூக்குத்தியாம், சிவந்த கல்லு முக்குத்தியாம் " இது ஒரு நாடோடி இசை வடிவம் (folklore) ரி.எம்.எஸ் .காதலில் உருகி உருகிப் பாடிக் களித்திருப்பார். இந்த பாடல்களில் "தென்னாங்கீற்று ஊஞ்சலிலே" எழுத்தாளர் ஜெயகாந்தனால் எழுதப்பட்டது.

தமிழரான எம். பி. சீனிவாஸ் தமிழில் இசையமைத்த படங்கள் மிகக்குறைவு. ஆனால் அவரது இசை அறிவு தமிழிசையின் அடிப்படையாக இருக்கலாம். கர்நாடக இசையின் நுணுக்கங்களை அவர் மிக அற்புதமாகப் பயன்படுத்தினார்.

ஜோன் ஆபிரகாம் இயக்கிய "அக்கிரகாரத்தில் கழுதை" திரைப்படத்தில் இசை வழங்கியதுடன் முக்கியமான பாத்திரத்திலும் நடித்திருக்கிறார். அந்தப்படத்தில் அவர் பயன்படுத்திய மரபிசை முக்கியமானது.

தமிழில் "நிஜங்கள் "என்றொரு படத்தில் மிகவும் அற்புதமான பாடல் எஸ்.பி.பி.எஸ்.பி.- ஷைலஜா இணைக்குரலில் "உன் காதோடு காதோடு சேதி சொன்னால் என்ன கண்மணியே" தொடர்ந்து ஷைலஜா ரிதம் செய்வார் மிக அருமை. இப்போதும் பழைய பாடல் என்று சொல்லமுடியாத நவீன இசை. இது எம்.பி.சீனிவாஸ் அவர்களது இசை அறிவுதான். மலையாள சினிமாவில் உச்சத்தைத் தொட்ட இசையமைப்பாளர் எம்.பி.சீனிவாஸ். அடூர் கோபாலகிருஸ்ணனோடு பல படங்கள் செய்தவர் .அதில் "சுயம்




வரம்" முக்கியமானது. பாடல்கள் இல்லை. ஆனால் பின்னணி இசையால் ரசிகர்களை கவர்ந்திருப்பார். எம்.பி. சீனிவாஸ் திரையிசை தாண்டி பல்வேறு இசை முறைகளை அறிமுகம் செய்தவர். அதில் ஒன்றுதான் சேர்ந்திசை (Harmony) இதற்காக முதன் முதலில் மெட்ராஸ் இளம் பாடகர்குழு (Madras youth choir) என்ற அமைப்பை உருவாக்கினார் . இது மக்களுக்கான இசை வடிவம் .

அதிக எண்ணிக்கையான பாடகர்களை சேர்ந்து பாட வைப்பதென்பது மிகவும் கடினமான காரியம். இசை மக்களால் உருவாக்கப்பட்டது அதை மக்களிடம் திரும்ப கொடுக்கவேண்டும் என எம்.பி.சீனிவாஸ் விரும்பினார். இது மாபெரும் இசைக்கச்சேரி போலத்தான். ஆனால் ஓர் ஆர்மோனியம், ஒரு தபேலா, சிலவேளை உடுக்கு, பல பாடகர்கள் என்பவற்றோடு சேர்ந்திசை நடைபெற்றது. பாடக்கூடிய மக்களிடமிருந்து பாடகர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவற்றுடன் கச்சேரி தொடங்கும் . இந்தப் பாடல்கள் பதிவு செய்யப்பட்டன.

இத்தகைய கச்சேரி மக்களிடம் நல்ல வரவேற்புப் பெற்றது. பாரதியார் பாடல்கள் ,நாடோடிப் பாடல்கள், இந்துஸ்தானி பாடல்கள் என பலவகை பாடல்களை இதில் மக்களை கொண்டு அவர் பாடுவித்தார்.இது அவர் மறைவின் பின்னும் தொடர்கின்றது. ஏனென்றால் யூ ரியூப்பில் இந்த வகையான பாடல்கள் பல இருக்கின்றன.

குறிப்பாக ,"மழை " என்ற பாரதியார் பாடல். பாடல் தொடங்கி முடிவிலேயே இசை சேரும் வண்ணம் செய்திருக்கிறார்கள்.அதுவரை ஆண்கள் மாறி ,பெண்கள் மாறி பாடுவார்கள். ஆண்கள் பாடிக்கொண்டிருக்க பெண்கள் வேறொரு வரியைப் பாடுவார்கள். அதனால் பின்னணி இசை தேவையற்ற ஒன்றாகி விடுகின்றது.அருமையாக இருக்கும். இதன் ஆரம்ப கர்த்தா எம்.பி.சீனிவாஸ் அவர்கள்தான். இசையாகவே வாழ்ந்தவர் அவர். அந்தச் சின்னப்பறவை 1988 இல் சேர்ந்திசை கச்சேரி ஒன்று நிகழ்த்திக் கொண்டிருக்கும் போது மாரடைப்பால் காலமாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல் கடவுள்

○ இராகவன்

19



இந்தப்பிரதியில் ஓரிடத்திலேனும் மழை வரவேற்கப்படவில்லை. அதுதிட்டமிட்டுச்செய்யப்பட்டிருக்குமொன்றுதான். அதற்காகவே மழையின் முக்கியத்துவம் உணரப்படாத வகையில் இந்தப்பிரதியை முழுக்கமுழுக்க நெடுங்கோடையால் நிரப்பி இளந்தாரி வெயிலை வரவேற்றேன். எனக்கான பொதுவியல்பும் அதுவாகத்தானிருக்கிறது. என்னால் ஒருபோதும் மழையை வரவேற்க முடிந்ததில்லை. மழையில் நனைவதை எனக்கிடப்பட்ட பெருஞ்சாபமாகவே கருதுகிறேன். வழமையாகத் திரைப்படப் பிரதிகளில் மழையைக் கொண்டாடத் தவறுவதில்லை. மழையின் விளைவு நீராக ஒழுகாமலிருந்தால் அதைச் சிலவேளை நான் வரவேற்றிருக்கக்கூடும். வெயிலை அடுத்து நான் பனியை வரவேற்பதற்குக் காரணமுமதுதான். வெயிலில் விளைவாக எதுவும் ஒழுகுவதுமில்லை. அதனால் என் முதல் விருப்புக்குரியது வெயில். மழையின் விளைவால் தேங்கியிருக்கும் நீரையெல்லாம் உறிஞ்சித்தள்ளிவிடுவதால் என் இரண்டாவது விருப்புக்குரியதும் வெயில் தான். ஈரமானதையெல்லாம் உலரவைத்துவிடும் கலை வெயிலுக்கு மட்டுமே உரித்தானது. ஈரலிப்பில் எனக்கு உடன்பாடிருப்பதில்லை. ஈரமானதைத் தகனம் செய்ய முடியுமா? நீங்களே சொல்லுங்கள். இதற்காகவெல்லாம் நீங்கள் மழையை வெறுக்க வேண்டியதில்லை. மழையை வெறுக்கச்சொல்லி உங்களைத் தூண்டுவதும் எனது நோக்கமில்லை. எனக்கு மழையை வரவேற்பதில் உடன்பாடில்லை, அவ்வளவுதான்.

இந்தப்பிரதியை வாசித்த பக்கிள் தவராசா, எந்தவொரு பறவையும் இதிலே வரவேற்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார். மழையை வரவேற்பதைத் திட்டமிட்டிருந்ததைப் போல பறவைகளை வரவேற்பதில்லையென்பதை நான் திட்டமிட்டிருக்கவேயில்லை. அது தன்னியல்பாகவே நிகழ்ந்ததொன்று. தற்செயலாக நிகழ்ந்தவொன்றெனவும் சொல்லலாம். ஆனால் உண்மையில் நான் எந்தவொரு பறவையையும் நேசிப்பவனல்ல. மழையைப் போலவே எல்லாப் பறவைகளையும் அடியோடு வெறுப்பவன். அவற்றின் எச்சமிடும் இயல்புகாகச் சில வேளைகளில் அவற்றின் கழுத்தை நெரித்துக் கொல்லவேண்டும் என நினைப்பவன். பறவை ஆர்வலர்கள் இதற்காக எனக்கெதிராகப் போர்க்கொடி உயர்த்தக்கூடும். அதைப்பற்றியெல்லாம் நான் கவலை கொள்ளவில்லை. இதுதான் எனது இயல்பு. தவிரவும் ஒன்றை விரும்பவும் வெறுக்கவும் எனக்கு முழு உரிமையுண்டு, அவ்வளவுதான். இதற்கெதிராகக் கருத்து முன்வைப்பதற்கு மற்றவருக்கு இருக்கும் உரிமையையும் நான் மறுக்கப்போவதில்லை. மேலும் இந்தப்பிரதியில் எனது வீடமைந்திருக்கும் நிலப்பகுதியூடாகப் புகையிரதம் சென்றுவருவதும், அப்பகுதி பூனைகளின் நடமாட்டத்துக்குரியதாகவிருப்பதும் ,எனது வீட்டின் சமையலறை மாயமாகி வானுயர்ந்த மாடமொன்று தோன்றுவதும், அதற்குள் நான் மறைந்து கொள்வதும் ,வீட்டின் முன்பகுதியில் யாரோ ஒருவரது ஆண்டுத் திதிக்கான ஏற்பாடுகள் பெருமெடுப்பில் நடந்து கொண்டிருப்பதும் ,அது அம்மாவினுடையதாயிருக்குமென நான் நினைக்கும்போது அம்மாவே முன்நின்று நடத்துவதுமான சம்பவங்கள் காட்சிப்படுத்தலின் போது சவாலானதாயிருக்குமென்றும்'பக்கிள் தவராசா' குறிப்பிடத்தவறவில்லை. மேலும் இந்தப்பிரதியைத் திரைப்படமாக்க வாய்ப்பேதுங்கிடைத்தால் நானே இயக்குவதுதான் நன்மை பயக்குமென்றும் சொல்லியிருந்தார். அது நிகழ்ந்தால் பார்க்கலாம்.

என்னால் ஒருபோதும் மழையை வரவேற்க முடிந்ததில்லை. மழையில் நனைவதை எனக்கிடப்பட்ட பெருஞ்சாபமாகவே கருதுகிறேன். வழமையாகத் திரைப்படப் பிரதிகளில் மழையைக் கொண்டாடத் தவறுவதில்லை. மழையின் விளைவு நீராக ஒழுகாமலிருந்தால் அதைச் சிலவேளை நான் வரவேற்றிருக்கக்கூடும்.

### பொன்மொழி அல்லது செப்புமொழி அல்லது மேற்கோள்?

இதுவரை கேட்கப்பட்ட கேள்விகளில் இதுவே நான் பெரிதும் விரும்பும் எதிர்பார்த்துக்கொண்டிருக்குமொன்றாகும். நான் என்றைக்குமே பொன்மொழி, செப்புமொழி மற்றும் மேற்கோள்களை உருவாக்குவதில் பின் நின்றதில்லை. ஒரு காலகட்டத்தில் இவற்றை உருவாக்குவது தான் எனக்குப் பொழுபோக்காகவிருந்தது. புகழ் பெற்றவர்களும் மிகப்புகழ்பெற்றவர்களும் தான் அவற்றையெல்லாம் முன்வைக்கவேண்டுமென்றொரு விதியில்லையென்பதால் நான் மட்டுமென்றில்லை எவரும் இவற்றை முன்வைக்கலாம்.

நீங்கள் இதுவரைக்கும் அப்படியொரு விதியி ருப்பதாகக் கருதி வந்திருந்தால் இப்போதிருந்தே அதை மாற்றிக்கொண்டு இவற்றை முன்வைக்க ஆரம்பியுங்கள்.

இதுவேயொரு சுவாரசியமான விளையாட்டாக உங்களுக்குத் தோன்றும். பின்னர் இதிலிருந்து நீங்கள் வெளியேற நினைத்தாலும் வெயியேறமுடியாதென்பதை அனுபவமாகப் பெறுவீர்கள். இது முன்வைப்புக்கான தருணமல்லவெனினும் ஒன்றேயொன்றை உங்களுக்காக முன்வைக்கிறேன்.

'பாதகமாக நிகழ்ந்த, நிகழ்கின்ற, நிகழவிருக்கின்ற எல்லாவற்றுக்காகவும் இயன்றால் அழலாம். அழுகைவரவில்லையெனில் சிரிக்கலாம். சிரிக்கத் தோன்றாவிடின் மௌனமாகவிருக்கலாம்'

### கடைசி வார்த்தைகள்?

இந்நேர்காணல் நிகழுமென நம்பவில்லை. ஒரு வித்தை போல நிகழ்ந்துவிட்டது. இது என்ன நோக்கத்துகாகப் பெறப்பட்டுள்ளதோ அது நிறைவேறாமலும் போகலாம். அநேகருக்கு இது உவப்பானதாயிருக்குமெனவும் நான் கருதவில்லை. எனினும் இதை மேற்கொண்டதில் மனநிறைவடைந்திருப்பதும் நான் எதிர்பார்த்திராத நயமாகும். இதைப் போல இனியொருபோதும் சாத்தியமாகப் போவதுமில்லை.

இங்கே நான் எவ்வித முன்னேற்பாடுகளுடனும் வரவில்லை. கேட்கப்பட்ட தருணத்தில் என்னென்ன தோன்றியதோ அதைத்தான் பதிலளித்தேன். இந்த அனுபவம் வார்த்தைகளுக்கப்பாற்பட்டது. அவசியமற்ற பகுதிகளிருக்குமென்றால் அதை நான் மறுதலிக்கப் போவதில்லை.

மேலும் இது தொடர்பாக முன்வைக்கக்கூடிய எந்தவொரு விமர்சனத்தையுங்கூட நான் மறுதலிக்கப் போவதில்லை. ஒரேயொரு பணிவான வேண்டுகோள். இது பெறப்பட்ட நோக்கம் நிறைவேறாவிட்டால் திருப்பித்தந்துவிடுங்கள்.

(முற்றும்)

# காதலின் சாபம்

சொல்லாத அன்பால் - சோகம்
கூடியது என்னுள்ளே
நில்லாத ஞாபகங்கள் - நிலை
கொண்டது எனக்குள்ளே

என்னுள்ளே மிஞ்சுவது
எந்நாளும் சோகமே
இதுவே நான்பெற்ற
காதலின் சாபமே

மனமோ வாடியது - அன்பை
அடைந்திட வழிதேடியது
நினைவுகள் கொள்வதினால்
நிமிடங்களும் சுமையாகியது

நிசப்த இரவில் எல்லாம்
நெஞ்சுருகி போகிறேன்
எட்டாத அன்பைக் கூட
எட்டித்தொட பார்க்கின்றேன்

ரா. துசேந்தன்
மன்னார்



# எதிர்காலம் பற்றிய குறிப்பு

பாலைவன சுடு மணலில்
ஊரும் பாம்புகள் இனி
எனது வீட்டின்
செல்லப்பிராணியாகலாம்.

மடல் பிழந்து
வறண்ட மதுவை சொரியும்
பேரீச்சை மரங்கள்
நிழல் மரங்களாகலாம்.


பட்டிப் பொங்கல் விட்டொழிந்து
ஒட்டகப் பொங்கல்
தேசிய பண்டிகையாகலாம்.

உஷ்ண மணல் வெளியில்
உருண்டு விளையாடப்
பழகும் குழந்தைக்கு
ஒட்டகப்பால் பானமாகவும்
கள்ளிப்பால் ஒத்தடமாகவும்
ஆகலாம்

இதுதான் நம்
எதிர்காலம் பற்றிய குறிப்பு.

வாழிய
நமோ நமோ மாதா

கவிஞர் வேல். லவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தும் அறியாமலும்

சுழியன்



## குரங்கு அமைச்சு

ஆளுங்கட்சி நாடாளுமன்றக்குழுக் கூட்டம் ஜனாதிபதி விக்கிரமசிங்க தலைமையில், ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது சமகால அரசியல் நிலைவரங்களுக்கு அப்பால் 'குரங்கு விவகாரம்' பற்றியும் பேசப்பட்டுள்ளதாம். கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே 'குரங்கு விவகாரம்' குறித்து கேள்வி எழுப்பி இதற்கு பிள்ளையார் சுழி போட்டாராம்.

" இந்தக் குரங்குத் தொல்லை தாங்க முடியவில்லை, எனது தொகுதியிலும் நிலைமை மோசம். ஆக அவற்றை சீனாவுக்கு அனுப்பும் முடிவை நிறுத்தவே கூடாது. இது விடயம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன ?" என்று வினா எழுப்பினாராம் அந்த எம்.பி. "குரங்குகளுக்கு இன்னும் விஸா" கிடைக்கவில்லை என இதற்கு சிரித்தபடியே பதிலளித்தாராம் ஜனாதிபதி.

இதன்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த வீரசங்க, " குரங்குகளைச் சீனாவுக்கு அனுப்பக்கூடாது. குரங்கு மூளையை அவர்கள் உண்கின்றனராம். நானும் எனது வீட்டில் 20 வருடங்களாக குரங்கு வளர்த்தவன். அதனால் அவ்வளவு பாதிப்பில்லை" என்றார்.

அவரின் இந்த கருத்தையடுத்து கூட்டத்தில் சிரிப்பொலி மேலோங்கியது. " அப்படியானால் குரங்குகளை கொண்டுவந்து உங்கள் வீட்டில் விடலாம், அதுமட்டுமல்ல உங்களுக்கு குரங்குத்துறை அமைச்சையும் வழங்கலாம் போலும்" என ஆளுங்கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர். " இது சிரிப்பதற்குரிய விடயம் அல்ல, குரங்குப் பிரச்சினை பெரும் பிரச்சினைதான். இரண்டு சீன நிறுவனங்கள் என்னுடனும் பேச்சு நடத்தின. அவை இறைச்சிக்காக அல்ல, மிருகக்காட்சிசாலைக்கே கொண்டுசெல்லப்படுகின்றன. இதற்கு அனுமதி வழங்கவேண்டும்." என ஒரு போடு போட்டாராம் மஹிந்தானந்த அளுத்கமகே. அவருக்கு விவசாயத்துறை அமைச்சரும் பக்கபலமாக இருந்தாராம்.

## பாடம்



தேசிய சுதந்திர முன்னணி யின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ கடந்தவாரம் நூல் ஒன்றை வெளியிட்டார். காலிமுகத்திடல் போராட்டத்தை மையப்படுத்தியதாக எழுதப்பட்டுள்ள அந்த நூலுக்கு 'ஒன்பது- மறைக்கப்பட்ட கதை' என பெயரிடப்பட்டுள்ளது.

நூல் வெளியீட்டு விழாவுக்கு அரசியல் பிரமுகர்களுக்கு அப்பால், தனக்கு தரம் 5 முதல் 10 வரை கல்வி கற்பித்த அக்ஷரா என்ற ஆசிரியையும் விமல் அழைத்திருந்தார். அழைப்பையேற்று அவரும் அங்கு வந்திருந்தார். விழாவில் உரையாற்றிய விமல், " எனது ஆசிரியரும் வந்துள்ளார். போராட்டத்தின் ஆரம்பத்தில் அவரும் கோல்பேஸ் பக்கம் சென்றவர்தான். போகும்போது எனக்குச் சொல்லவில்லை. போய் வந்த பின்னரே அது பற்றித் தெரியப்படுத்தினார். அவருக்கு நான் எதுவும் சொல்லப்போகவில்லை. சிலவேளை, மாணவர்களாலும் ஆசிரியர்களுக்கு கற்பிக்க முடியும்" எனக் குறிப்பிட்டார்.

நூல் வெளியீட்டு விழா முடிந்த பின்னர் விமலிடம் வந்த ஆசிரியை, " விமல் நீங்கள் சொன்னது சரிதான். இன்று உங்களிடம் பல விடயங்களைக் கற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது." என சிரித்தபடியே கூறினாராம்.

## நம்பாதே!



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரியவசம், முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவைச் சந்திக்க சென்றுள்ளாராம். " வாருங்கள் சாகர, என்னை மறந்துவிட்டீர்கள் என்றல்லவா நினைத்தேன்" எனக்கூறி சாகரவை வரவேற்றாராம் கோத்தா. " இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள் சேர்" என கோத்தாவிடம் வணக்கம் கூறிய சாகர. வந்த நோக்கத்தையும் விவரித்தாராம்.

" அரசியல் நடவடிக்கை எல்லாம் எப்படி போகின்றது? " என்று கோத்தா கேட்க, " சிறப்பாகச் செல்கின்றது சேர், எமது கட்சிக்கு எதிராகப் பின்னப்பட்ட சூழ்ச்சி வலைகளைத் தற்போது அவிழ்த்துவருகின்றோம்." என பதிலளித்தாராம் சாகர. " அருகில் உள்ளவர்கள் அதிகம் நம்பக்கூடாது சாகர. நானும் அவ்வாறு நம்பித்தான் ஏமாந்தேன். பதவிகளை வழங்கினேன். அவர்களை நம்பியது என் தவறுதான்." எனக் கூறி கலங்கினாராம் கோத்தா. " சேர், பழைய கதை வேண்டாம். நாம் முன்நோக்கி செல்வோம்." எனக்கூறி விடைபெற்றாராம் சாகர.

# யாழ்ப்பாண வரலாறு

ந.பரமேஸ்வரன்

1505-1948 வரை



காந்தியின் காதிநிதி அன்பளிப்பு - யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து கிடைத்த தொகை 18. 200.25 சதம்.

காந்தியின் விஜயத்தைத்தொடர்ந்து காந்தியின் கொள்கைகளால் கவரப்பட்ட யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்கள் தேசிய உடையை அணியத்தொடங்கினர். யாழ்ப்பாணத்தில் பின்னாளில் பிரபல கல்லூரி அதிபர்களாகப் பதவி வகித்த ஒறேற்றர் சுப்பிரமணியம், I.P.துரைரத்தினம்,N.சபாரத்தினம் அனைவரும் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் பண்ணையில் வளர்ந்தவர்களே.

**1927 டிசெம்பர் 08**

பாரியார் சகிதம் யாழ்ப்பாணம் வந்த ஆளுநர் ஸ்டான்லி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, சுன்னாகம் இராமநாதன் கல்லூரி என்பவற்றுக்கு விஜயம் செய்தார். இவரது ஞாபகார்த்தமாகவே யாழ்ப்பாண நகரத்தில் உள்ள வீதியொன் றுக்கு ஸ்டான்லி வீதி எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

டொனமூர் ஆணைக்குழுவினர் வந்து மக்கள் கருத்துக்களை கேட்டறிந்தனர். இந்துசாதனம் பத்திரிகை ஆசிரியர் இராசரத்தினம் டொனமூர் ஆணைக்குழுவினரிடம் யாழ்ப்பாணத்துக்குத் தேவையான வீதி வசதிகள், மருத்துவ வசதிகள் பற்றி எடுத்துக் கூறினார்.

**1927 டிசெம்பர் 21**

சேர். கனகசபை காலமானார்

பன்னாலையில் பிறந்த இவர் 1882 சட்டத்தரணியாக தொழிலைத் தொடங்கினார்.1906 ஆம் ஆண்டு சட்டசபையில் தமிழ் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.1917 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசு இவருக்கு சேர் பட்டம் வழங்கியது. இந்துசாதனம் பத்திரிகை ஆசிரியர் குழுவில் இணைந்து பணியாற்றிய இவர் பன்னாலையில் பாடசாலை ஒன்றையும் கட்டியுள்ளார். யாழ்ப்பாணம் நாகாவிகாரைக்கான அடிக்கல் நாட்டு விழா பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெற்றது. சேர்.வைத்திலிங்கம் துரைசாமி W.A. டீ சில்வா ஆகியோர் இணைந்து அடிக்கல்லை நாட்டினர்.இந்நிகழ்வில் பெருமளவு இந்து கிறிஸ்தவ பௌத்த மக்கள் கலந்து கொண்டனர். முதலாவது புத்தர் சிலையை சில்வாவும் இரண்டாவது புத்தர் சிலையை சேர் .வைத்திலிங்கம் துரைசாமியும் நாட்டினர்.இந்நிகழ்வில் டி.பி.ஜெயதிலகவை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. சுகயீனம் காரணமாக அவரால் கலந்து கொள்ள முடிய வில்லை.

டி.பி.ஜெயதிலகவுக்குப் பதிலாக சேர். வைத்திலிங்கம் துரைசாமி கலந்து கொண்டார்.தலைமை பிக்கு பிரித் ஓதினார். நாதஸ்வர மேளவாத்தியமும் இசைக்கப்பட்டது.விகாரைக்குரிய பௌத்த பாடசாலைக்கு காணியை வழங்கிய வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலுக்கும் இந்துக்களுக்கும் W.A. டீ சில்வா நன்றி தெரிவித்தார்.

**1928 ஜனவரி 02**

பளை - காங்கேசன்துறை இடையே ரயில் கார் சேவை ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாண அரசாங்க அதிபர் பிறீமன், டொனமூர் ஆணைக்குழுவிடம் யாழ்ப்பாணத்துக்கு (வடமாகாணத்துக்கு) ஒரு மாகாணசபை தேவையெனக் கோரிக்கை விடுத்தார். திரு.சின்னத் தம்பிப்பிள்ளை, சென்னை பச்சையப்பன் கல்லூரி அதிபராக நியமிக்கப் பட்டார்.. திரு. சீனிவாசகம் லண்டன் Royal Economic Society இல் ஆராய்ச்சியாளராக நியமிக் கப்பட்டார். பாடசாலைகளில் மாணவர்களிடையே சாதிப்பாகுபாடு காட்டக்கூடாது என கல்விச்சபை பாடசாலைகளுக்கு சுற்று நிருபம் அனுப்பியது.

**1928 ஏப்ரல் 17**

யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் வருடாந்த மகாநாடு கீரிமலை வைத்திலிங்கம் மடத்தில் மூன்று நாள் நடைபெற்றது.சென்னை சட்டசபை உறுப்பினர் சத்தியமூர்த்தி, நாலந்தா வித்தியாலய (இப்போது கல்லூரி) அதிபர் M.G.K.ex. பெரேரா,S.W.R.D. பண்டாரநாயக்கா, பிரபல தொழிற்சங்கவாதி A.E.குண சிங்க, சுவாமி விபுலானந்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த மகாநாட்டில் பிரித்தானி யரிடமிருந்து இலங்கை விடுதலையடைய வேண்டுமென்ற கோரிக்கை வலியுறுத்தப்பட்டது.இந்த மகாநாட்டில் தான் பண்டாரநாயக்கா சமஷ்டி ஆட்சி முறையே இலங்கைக்குப் பொருத்தமானது என உரையாற்றினார். J.D.பிறவுண் அரசாங்க அதிபராக நியமிக்கப் பட்டார்.

**1928 ஏப்ரல் 01**

திரு. சங்கரப்பிள்ளை, பர்மாவின் இராணுவப் பிரதி நிதிக்கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டார்.

**1928 ஏப்ரல் 25**

கைதடி சைவமகாசபையின் கொழும்பு கிளைக்கூட்டம் கொம்பனித்தெருவில் திரு.பொன்னப்பா தலைமையில் நடைபெற்றது. இலங்கை தமிழ் இந்துக்களின் சனத்தொகை 985,000, வடமாகாண சனத்தொகை 540, 000

**1928 ஒகஸ்ட்**

இந்து மகாசபை சிவியர்தெருவில் குறைந்த சாதி மாணவர்களுக்கென பாடசாலையொன்றை ஆரம்பித்தது. முதல் கட்டமாக 100 மாணவர்கள் இணைந்து கொண்டனர்.

**1928 டிசெம்பர் 03**

அநுராதபுரம் உள்ளூராட்சிசபைக்கான தேர்தல் நடைபெற்றது.இதில் தமிழர்களான திரு. சிற்றம்பலம் =225 வாக்குகளையும்.இராமசாமி= 150 வாக்குகளையும் பெற்றனர். இருவரும் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.அநுராதபுரத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் எவ்வளவு தூரம் இருந்தது என்பதைக் காட்டுவதற்காகவே இந்தப்பதிவு.அநுராதபுரம் உள்ளூராட்சி சபையில் தமிழர்கள் தலைவர்களாகவும் இருந்துள்ளனர்.

**1928 டிசெம்பர் 02**

சங்கானை மலாயா சங்கத்தின் முதலாவது ஆண்டு பொதுக்கூட்டம் டிசம்பர் 02 ஆம் திகதி இலங்கைத் தமிழ்சங்க மண்டபத்தில் தலைவர் தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.திரு. விசுவநாதன் செயலாளராகவும், சண்முகம் பொருளாளராகவும் தெரிவு செய்யப் பட்ட னர்.

(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 10 . 1937



மறைவு 27 . 04 . 2023

## புஸ்பம் சிவஞானம்

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 108/9. இராசாவின் தோட்டம் வீதி. யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட புஸ்பம் சிவஞானம் கடந்த (27.04.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புஸ்பம் அவர்களின் அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான சுப்பையா வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான சின்னத்துரை தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற தர்மகுலராசா மற்றும் தர்மகுலசிங்கம். தர்மகுலராணி. தர்மகுலதேவி. காந்தசொரூபி. வரதராசா. காலஞ்சென்ற இளங்கீரன் மற்றும் கலிதரன். கீதாஞ்சலி ஆகியோரின் அன்புத் தாயாரும். அருந்தவம். ஸ்ரீஸ்வரன். ஜெயராசா. உத்தரதாசன். சாந்தினி. காலஞ்சென்ற சிவசேகரம் ஆகியோரின் மாமியாரும். காலஞ்சென்றவர்களான சண்முகம். தர்மலிங்கம். நவரெத்தினம். பாக்கியலெட்சுமி. நாகம்மா ஆகியோரின் சகோதரியும். காலஞ்சென்றவர்களான பரமலிங்கம். இராசலிங்கம். இராஜலெட்சுமி. அன்னலெட்சுமி மற்றும் சரஸ்வதி. இராசாத்தி ஆகியோரின் மைத்துனியும். பராசக்தி. இரத்தினம். காலஞ்சென்ற வில்வரெத்தினம் ஆகியோரின் சகலியும். சுதர்சினி - வினோதரன். ராஜரமணன். பாலகீதன் - சுஸ்மிதாஞ்சலி. சுகன்யா. சுவர்ணா - யசோதரன். லவகீரன். லாவண்யா. லக்சனா. கோபிகா. வேணுகோபிகாந். பானுகோபிகாஸ். அனந்திகா. லக்ஷிகா. அனுஸ் ஆகியோரின் பேர்த்தியும் அபிநயன். சுஜானா. சயானி. சஜின் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று. மதியம் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

021 221 7406

(CS 24667) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 06 . 1939



மறைவு 27 . 04 . 2023

## திரு.துரைச்சாமி தியாகராஜா

யாழ். நாவற்குழியைப் பிறப்பிடமாகவும். கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட துரைச்சாமி தியாகராஜா அவர்கள் கடந்த (27.04.2023) வியாழக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார். காலஞ்சென்றவர்களான துரைச்சாமி சின்னத்தம்பி செல்லம்மா துரைச் சாமி தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்ற தங்கரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும். காலஞ்சென்ற கனகம்மா மற்றும் சிவபாக்கியம். பஞ்சாட் சரம். சரஸ்வதி. சிவமணி. மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரரும். சிறிதரன் (சுவிஸ்). புவிதரன் (சுவிஸ்). கிரிதரன் (சுவிஸ்). சசிதரன் (பிரித்தானியா). ஸ்ரீநந்தினி (பிரித்தானியா) ஆகியோரின் அன்புத் தந்தையும். மொனிக்கா. நளாயினி. ஜெனிதா. சுசியந்தினி. இராகுலன் ஆகியோரின் அன்பு மாமனாரும். சுனந்தா. கிசோர். அப்ஷரா. சயந். அபர்னா. தமன்யா. அஸ்விதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.04.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல் லத்தில் பார்வைக்கார்க வைக்கப்பட்டு. நாளை (01.05.2023) திங்கட்கிழமை முற் பகல் 09.00 மணியளவில் இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் முற்பகல்.10.00 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.18, கந்தபுராண வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 24664) A-1

# மரண அறிவித்தல்

## திருமதி கனகரத்தினம் பூரணம்



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும். மன்னார் நாகதாழ்வில் வசித்து தற்போது இல 1,யாழ் மருதடிவீதி மற்றும் இல 116/2.இராசாவின் தோட்ட வீதியில் வசித்து வந்தவருமாகிய திருமதி கனகரத்தினம் பூரணம் அவர்கள் கடந்த (27.04.2023) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான தாமோதரம் பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும். காலஞ் சென்ற கனகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும். காலஞ்சென்ற வர்களான நாகம்மா. கந்தையா. பொன்னம்மா. நாகரத்தினம். நாகசுந்தரி. கண்மணிப்பிள்ளை. சிந்தாமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்றவர்களான தனிநாயகம். வைத்தியலிங்கம். பொன்னம்பலம். வள்ளியம்மை. சேதுபதி. கமலம். ஜயாத்துரை. வேலாயுதபிள்ளை. கார்த்திகேசு. பாலசிங்கம். கோபாலசிங்கம். பொன்னம்மா மற்றும் அன்னப் பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும். தவமணியின் (ராணி) அன்புத் தாயாரும். குமாரசாமியின் அன்பு மாமியாரும் ஜீவரத்தினம். தர்மரத்தினம் காலஞ்சென்ற அற்புதராணி மற்றும் அமிர்தராணி. நிர்மல ரத்தினம். சந்திரராணி ஆகியோரின் சிறிய தாயாரும். காலம்சென்ற துரை ரத்தினம் மற்றும் இராசரத்தினம். தயாபரன். மனோரஞ்சினி. கலாரஞ்சினி. பவானி. லோகேஸ்வரன். லோகேந்திரன். காலஞ்சென்ற யோகேந்திரன் மற்றும் மோகனகுமார். நந்தகுமார் காலஞ்சென்ற ஜெயபவான். சுபாசினி மற்றும் சாரங்கன். துசியந்தன்.லச்சுமி. பத்தியம்மா. லலி. வில்லியம். விசயா. காலஞ்சென்றவர்களான நாகேந்திரன். வசந்தன் ஆகியோரின் பெரிய தாயாரும். மகேந்திரம். தியாகராசா. மனோகரன். கணநாதன். திலகம். யோகம். தங்கா. தனம். சத்தியேந்திரா. புவனேந்திரா. யோகேந் திரா. பவானி. காலஞ்சென்றவர்களான பராசக்தி. ரவீந்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும். கவிதா. சுரேஸ். நித்தியா. ரமேஸ். நந்தினி. குணா. லதா. நிருபா. நிருஷன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியாரும் பிரணவன். அகல்யன். டியானா.டிலானி.ரானியா. ஆதிரன். சியானி. சிவானி. ஆரணி. யக்சவி. அரோன். அபிரா. ஆரபி. அஸ்விகா. அகரன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல 116/2. இராசாவின் தோட்ட வீதி.யாழ்ப்பாணம் என்ற முகவரியில் வைக்கப்பட்டு இறுதி அஞ்சலி நிகழ்வுகள் இன்று (30.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி முற்பகல் 10.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 426 9166, 077 050 4840

(CS 24683) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CEYLON TAMIL MARRIAGE BUREAU SINGAPORE

We have prospective brides and bridegrooms seeking suitable partners worldwide. Those who are interested, please

contact:

Tel: +65 97539583
Email:ctmbsg@gmail.com
Strictly Confidential
Business UEN No:53406709C

(cs 50104) (N-1)

## பெயர் மாற்றம்

பாண்டியன்குளம் நட்டாங்கண்டலில் வசிக்கும்
**வேலாயுதம் அமுதினி**
ஆகிய நான் எனது பெயரை **வேலாயுதம் சகானா**
என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல
ஆவணங்களிலும் **வேலாயுதம் சகானா**
என்றே கையெப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச
குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

cs 50238) (N-1) **வே. சகானா**

## கணினி பதிவாளர் தேவை

எமது நிறுவனத்தில் கணினியில் தரவுகள் பதிவு செய்வதற்கு Microsoft office படித்த முன் அனுபவம் உடைய பெண் பணியாளர் தேவை.
சுயவிபரக்கோவையுடன்,
உரிய கல்வி சான்றிதழ் மற்றும் கிராமசேவகரின் சிபார்சு கடிதத்துடன் கிழமை நாள்களில்
முற்பகல் 10.00 மணி தொடக்கம் 4.00 மணிவரை நேரில் வரவும்.

**சிவா நறுமணப் பூங்கா**
**இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**(சத்திரசந்திக்கு அருகாமையில்)**

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 06 . 1957



மறைவு 29 . 04 . 2023

### திரு. ஐயாத்துரை சிவநாதன்

**(ஸ்தாபகர் - மருதம் வியாபார நிறுவனங்கள்)**

நெல்லியடியை பிறப்பிடமாகவும் கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. ஐயாத்துரை சிவநாதன் (ஸ்தாபகர் - மருதம் வியாபார நிறுவனங்கள்) நேற்று (29-04-2023) சனிக்கிழமை அதிகாலை அமரத்துவம் அடைந்து விட்டார்.

அன்னார் நெல்லியடியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஐயாத்துரை செல்வரத்தினம் தம்பதிகளின் அன்புமகனும், காலஞ்சென்ற நடராசா சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கிருத்திகாவின் பாசமிகு கணவரும் கிருஷாந்த், ஜெகன்நாத், துவாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஜிதா, புஷ்பமீரா ஆகியோரின் அன்பு மாமனாரும், பத்மநாயகி, தேவராசா, கோமளேஸ்வரி, காலஞ்சென்ற நடேசன், கமலநாயகி மற்றும் கௌரி ஆகியோரின் அன்புச்சகோதரனும், தேவராசா, சிவநாதன், கௌரி, செல்வநாயகி , காலஞ்சென்ற கணேசன் ஆகியோரின் மைத்துனரும் கிருத்திக், திகாஷ் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று (30.04.2023) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கரவெட்டி சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மருதம்
கரவெட்டி மத்தி கரவெட்டி. (CR/39756)AH-1

**தகவல்: குடும்பத்தினர்.**

**கிருஷாந்த் 0777550966 , ஜெகன்நாத் 0741518491**

---

தீர்மானிக்கப்பட்ட திகதியில் அதிகூடிய சம்பளம் வழங்கும் நிறுவனத்தை தேடும் உங்களை நாம் வரவேற்கின்றோம்!

## பாதுகாவலர் தேவை (Security)

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, நெல்லியடி, முல்லைத்தீவு, மல்லாவி ஆகிய இடங்களில் பணிபுரிவதற்கு 60 வயதிற்கு குறைந்தவர்கள் அழைக்கவும்.

தொடர்புகளுக்கு : **0703 678 960**

## முதலாம் ஆண்டு நினைவுதினம்

### மயில்வாகனம் பரமானந்ததேவி

மலர்வு 22.01.1938 உதிர்வு 30.04.2022



ஆண்டு ஒன்று
ஆனபோதும் அம்மா
உங்கள் நினைவுகள்
ஆறவில்லை எம்துயர்
எத்தனை ஆண்டுகள்சென்றிடினும்
உங்கள் நினைவுகள்
எங்கள் மனதில் நீங்காது
நிலைத்திருக்கும்.
அம்மா உங்கள் ஆத்மா
சாந்தியடைய முருகனை வேண்டி
நிற்கின்றோம்.
ஓம் சாந்தி!

**குடும்பத்தினர்.**
"உதயதாரகை", கைதடி மத்தி,
கைதடி.

(CS/39775)AH-1

## ஆண் பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு, வல்வெட்டித்துறையில் ஐந்து வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகின்ற வல்வை முதியோர் இல்லத்துக்கு ஆண் பராமரிப்பாளர் தேவை. உணவு, தங்குமிட வசதி இலவசம்.

**077 210 6857,**
**077 154 2067,**
**021 226 5551**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 13 . 04 . 1934



மறைவு 31 . 03 . 2023

கடந்த (31.03.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திய
எமது குடும்பத் தலைவர்

### அமரர் திரு. வேலாயுதம் சின்னமணி

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.04.2023) ஞாயிற்றுக்கிழமை மதியம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து பல வழிகளிலும் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும் தொலைபேசி ஊடாக ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், பதாகைகள், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தொகுதிப்பண்ணை,
இராசவீதி, கோப்பாய் மத்தி,கோப்பாய்.

(CS/50250)AH-1

**குடும்பத்தினர்.**

---

## மதுபான விற்பனைக்கு தடை

கொழும்பு, ஏப். 30

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் எதிர்வரும் மே மாதம் 4, 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் மூட வேண்டும் என்று மதுவரித் திணைக்களம் உத்தரவிட்டுள்ளது.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-14,இ)

### தேவை

சிறிய விடுதி ஒன்றுக்கு அறை பராமரிப்பாளர் (பெண்) தேவை. சம்பளம் :- 18,000/=

**077 993 8348**

### மரத்தூசு இலவசம்

யாழ் நகரில் மரத்தூசு தேவையானோர் தொடர்பு கொள்ளவும்.

**077 917 7281**

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 2-2 1/2 உடைய டீபிறிசர் விற்பனைக்கு.
(திருநெல்வேலி)
**077 296 4899**

### ஆடம்பர வீடு, காணி

BOSCO பாடசாலைக்கு அண்மையில் அழகிய ஆடம்பர வீடும், Farm School க்கு அண்மையில் 10 பரப்பு காணியும் விற்பனைக்கு.

தொடர்பு: **077 601 1135**

Single Door
Toyota டீசல் கூலர்
விற்பனைக்குண்டு.
64-8750
• தச்சு வேலைக்கு ஆள் தேவை
077 772 2265

### A/C விற்பனைக்கு

பாவனையில் உள்ள வீட்டு A/C விற்பனைக்கு
12,000 BTU- 40,000/= American Air
24,000 BTU-80,000/= LG

தொடர்பு: **077 179 2577**

### வீடு வாடகைக்கு உண்டு

யாழ். நகரில் வீடுகள் வாடகைக்கு உண்டு. அத்தோடு களஞ்சியசாலைகள், படிக்கும் மாணவர்களுக்கான அறைகள், சுற்றுலா பயணிகளுக்கான நவீன அறைகள், வீடுகள் எம்மிடம் வாடகைக்கு உண்டு.

**077 345 0039**
**077 348 0039**

### இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

**பிரிவு-46**

- ★ Diploma in English / Spoken English
- ★ Diploma in ICT
- ★ Diploma in Singalam
- ★ Diploma in Political Science
- ★ Diploma in Psychology & Counselling
- ★ Diploma in Care giver
- ★ Diploma in Nursing
- ★ Diploma in Fisheries Science
- ★ Diploma in Media

**ஆரம்பம் : 15.04.2023 10 AM**

★ காலம் : 3 மாதங்கள் ★ சான்றிதழ் பிரிவுகள்

**IELTS / Life Skills** A1, B1, பிரிவு II
சண் மாஸ்டரின் வகுப்புகள் ஆரம்பமாகின்றன

**English /ICT-O/L, A/L**
**வகுப்புக்கள்:**(Eng/Tamil)
பாடசாலை மாணவர்களின் பாடத்திட்டத்திற்கு அமைவாக வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

**IPS** to your future
**Thirunelvely**
**T.P: 021 4340229**
**076 685 2529**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org